14வது வருடத்தில்
# விளம்பரம்
VLAMBARAM™
416-282-8059
416-282-4978

வாய், பல் சம்பந்தமான வைத்திய சேவைகளுக்கு
WALK IN DENTAL CLINIC
Dr. Iru Vijayanathan
குடும்ப பல்வைத்தியர்

OPEN 7 DAYS
416-264-3232
3150 Eglinton Ave. E.
Markham & Eglinton சந்திப்புக்கு அருகாமையில்


வீடு விற்க, வாங்க...
Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)

HomeLife GTA Realty Inc.
1711 McCowan Rd. Suite #206, Toronto
Direct: 416.315.9397
OFFICE: 416.321.6969
Sales Agents Welcome

நதி 14 | பாலம் 18 | சமூக முன்னேற்றப் பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | SEPTEMBER 15, 2004


ஒதுக்கிவிட முடியாத தலைவர் 03


இரத்த அழுத்தத்தை அதிகரிக்கும் 09


பனையும் பசுமை நினைவுகளும் 16

செப்ரெம்பர் 25, 04
**பொங்குதமிழ்**
Queens Park
Toronto

## விபத்தை ஏற்படுத்தி விட்டு தப்பியோடும் வாகனங்கள்

வீதியில் ஒரு வாகனம் விரைந்து வருகின்றது. திடீரென ஒருவரை அல்லது இன்னோர் வாகனத்தை மோதிவிட்டு கண் இமைக்கும் நேரத்திற்குள் மறைந்து போய்விடுகின்றது. இந்த அடையாளம் தெரியாத வாகனத்தால் விபத்துக்குள்ளாகி உடல், உள நிலை பாதிக்கப்பட்டவரின் நிலைமை என்னாகும்? இவருடைய இழப்புகளை யார் நிவர்த்தி செய்வது? இதற்கு ஏதாவது நட்ட ஈடு கிடைப்பதற்கு வழி உண்டா?

கனடாவில் வீதி விபத்துகள், வாகன விபத்துகளின் போது உடல், உள ரீதியாக காயங்கள், பாதிப்புகளை எதிர் கொண்டவர்கள் பல்வேறு வகையான நிவாரண நட்ட ஈடுகளை காப்புறுதி கம்பனிகளிடமிருந்து பெற்றுக் கொள்ள உரித்துடையவர்கள் ஆவார்கள். இதில் ஒன்ராரியோ மாகாண வீதி விபத்து காப்புறுதி நட்ட ஈடுகள் சட்ட விதிகளின் படி பின்வரும் அடிப்படை நிவாரணங்களை பாதிக்கப்பட்டவர் பெற உரித்துடையவர் ஆவார்.

வீதிகளில் பாதிக்கப்பட்டவர்கள் நட்ட ஈட்டு நிதியம்
(High way Victims Indemnity Fund)
வீதிகளில் பாதிக்கப்பட்டவர்கள் நட்ட ஈட்டு நிதியம் என்ற அமைப்பு மாகாண அரசினால் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த நிதியத்திற்கு பாதிக்கப்பட்டவர் ஒருவர் ஆதாரங்களுடன் விண்ணப்பம் செய்து, ஒரு வரையறுக்கப்பட்ட தொகை நட்ட ஈட்டினைப் பெற்றுக் கொள்ளமுடியும். அடையாளம் தெரியாத வாகனங்களினால் அல்லது வாகன காப்புறுதி இல்லாத நிலையில் தனது வாகனத்தை செலுத்தி உடல், உள நிலை பாதிக்கப்பட்டவர்கள் கூட இந் நிதியத்திடம் இருந்து நட்ட ஈட்டினை பெற்றுக் கொள்ளலாம்.

வருமான இழப்பீட்டு நிவாரணம்
(Income replacement Benefit)
விபத்தில் காயம் அடைந்தவர் தமது தொழிலை தொடர முடியாத நிலையில் இருந்தால் தாம் பெற்று வந்த தேறிய வருமானத்தில்- 80 வீதமான தொகையினை கிழமை வருமானமாக 104 கிழமைகளுக்கு பெற்றுக் கொள்ளலாம். இதில் முதல் ஒரு கிழமைக்கு விதி விலக்கு உண்டு.

தொடர்ச்சி 11ம் பக்கம்

# இலங்கைத் தமிழர்களின் பொருளாதாரத்திற்கு ஆப்பு வைக்கப் போகும் சேது சமுத்திரத் திட்டம்

இலங்கைத் தமிழர்களை பெருளாாரததை பொடி பொடியாக்கப் போகும் சேது சமுத்திரத் திட்டம்



ஈழத் தமிழர்களின் காவலர்கள் என்று தம்மைத் தாமே பிரகடனப் படுத்தியுள்ள வைகோ மற்றும் கலைஞர் கருணாநிதியினால் கொண்டுவரப்படவுள்ள சேது சமுத்திர திட்டத்தால் முழு இலங்கையின் பொருளாதாரமும் பொடி பொடியாகப் போய்விடப் போகின்றது. இந்த திட்டத்தால், குறிப்பாக இலங்கைத் தமிழர்கள் மிகப் பெரும் பாதிப்பை அடையப்போகின்றார்கள் என்று இயற்கை விஞ்ஞானிகள் எச்சரிக்கின்றனர்.

இந்த சேது சமுத்திர திட்டம் ஈழத்தமிழர்களின் கடல்பிராந்தியத்திற்குள்ளேயே அமையப் போகின்றது. இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் அமைந்துள்ள இயற்கையான கடல் பரப்பை அழித்தொழிக்கும் இந்த சேது சமுத்திர திட்டத்தின் மூலம் இலங்கையின் தாழ்ந்த கடல் பிரதேசங்களான தமிழர்களின் நிலங்களை காலப்போக்கில் கடல் அழித்து விடும் என்று இயற்கை விஞ்ஞானிகள் எச்சரிக்கை விடுத்துள்ளார்கள்.

இந்த இயற்கையான கடல் வளத்தில் கிடைத்துக் கொண்டிருக்கின்ற மீன் வளமும், சேது சமுத்திர திட்டத்தின் மூலம் முற்றாக அற்றுப்போய்விடும் என்றும் எச்சரிக்கப்பட்டு உள்ளது. ஆனால் தமிழர்களின் காவலர்களான இலங்கைப் பாராளுமன்ற தமிழ் அரசியல் வாதிகள் இது குறித்து எவ்வித அக்கறையும் கொள்ளவில்லை. அதே சமயம் தமது வாழ்க்கையை பாதிக்கப் போகும் இந்த சேது சமுத்திர திட்டத்திற்கு எதிராக சாமானிய இந்திய மீனவர்கள் போராட்டங்களை ஆரம்பித்துள்ளனர்.

இலங்கையில் இதுபற்றி எந்த தமிழ் அமைப்புகளும் எவ்வித அக்கறையும் கொள்ளாத நிலையில் சிங்கள அரசே இது தொடர்பான எதிர் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது. இது தழிழர்களுக்கு ஒரு வெட்கம் கெட்ட செயல். சேது சமுத்திரத்திட்டத்தால் யாழ். குடாநாட்டுக்கும் மன்னாருக்கும் ஏற்படப்போகும் பாதிப்பு குறித்து

தொடர்ச்சி 5ம் பக்கம்


சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
ஆலயம் திறந்திருக்கும் நேரங்கள்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில்
காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm, மாலை 5pm - 9pm
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்.
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 - 754 - 7338 / 416 -724 -7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarboro.

Singapore Communication
Since 1991
$45.00/ Month
- Up to 700 Min Free
- Evenings & Weekends Free
- 2 Year contract
••• Offer Ends without notice •••

Family plan $40.00/ M/2 phones
- 100 Min Daytime to share /Weekend Free
- Upgradable for Free Evening with more Min 2500 Min Free
- between 2 phones V/M, C/W, C/C Free
- Buy one phone as low as $49.99 & 2nd Free
••• 2 year contract


More Info. Call: 416-740-5292
5010 Steeles Ave. W., Unit 17 ABC-(Kipling & Steeles)

துரித பணமாற்றுச் சேவை
வவுனியா - கொழும்புச் சுற்றுப் புறங்களுக்கும் - சிங்கப்பூர் - சென்னை ஆகிய இடங்களுக்கும் கடுகதியில் பணம் அனுப்புவதற்கு

மு. காசிப்பிள்ளை & சன்ஸ்
416.267.8221

"Making Dreams Reality"


HomeLife GTA Realty Inc.
Ravi R. Raveendran BSc.(Eng)
Sales Representative
416•817•8479
Bus: 416•321•6969
1711 McCowan Rd., Suite #206, Scarborough, ON. M1S 3Y3
INDEPENDENTLY OWNED AND OPERATED, BROKER


Insurance & Financial Services
Balan Kanapathi (Agent)
- Auto
- Home
- R.R.S.P
- Life
- Disability
- Mutual Fund
- Group Insurance
- Child Education
- Travel & Business

416.321.1515 •905.294.2429
4433 Sheppard Ave. E. Suite 200, (Brimley/Sheppard)

வீடு வாங்க, விற்க...
ரவி பரமு
வீட்டுப் பிரதிநிதி
DIRECT: 416.262.4176
OFFICE: 416.321.6969

HomeLife GTA Realty Inc.
1711 McCowan Rd. Suite #206, Toronto

# கனவும், கடனும்



கடன் ஒரு காமதேனு. அதை உபயோகிக்கத் தெரிந்திருந்தால், உபயோகிக்க அப்படி என்னதான் தேவை?

கட்டுப்பாடு, சுயகட்டுப்பாடு வரவு அறிந்து செலவு செய்யும் கட்டுப்பாடு. செலவு செய்வதில் ஒரு ஒழுங்கு முறை, அடிப்படை ஒழுக்கம்.

இவை எல்லாம் இருந்து கடனைப் பெற்றால் கடன் காமதேனுவாக, கற்பக விருட்சமாக வாழ்வுக்குத் தேவையானதை எல்லாம் தரும். கனவுகள் நனவாகும். எல்லாக் கடன்களும் ஒரே மாதிரியானவை அல்ல. பல வகையான கடன்கள் உள்ளன. கிரிடிட் கார்டுகள், லைன் ஆப் கிரிடிட் (Line of credit), மோட்கேஜ் என்று பலவகை உள்ளன. ஒவ்வொன்றுக்கும் என சில தனித்தன்மைகள் உள்ளன. மேலும் ஒவ்வொன்றிலும் உபயோகிப்பதில் நன்மை, தீமை என்று இரண்டும் உள்ளது.

சில கடன்களுக்கு மாறும் வட்டி (Variable Rate), நிலையானவட்டி (Fixed Rate) என்று இரண்டுவிதமான வட்டிகள் இருக்கக் கூடும். சரியான கடனை சரியான நேரத்தில் தேர்ந் தெடுத்தும் பயன்படுத்துவதிலேயே வெற்றி அமைந்துள்ளது. நிலையான வட்டியை வீட்டு அடமானத்திற்குப் பெறும்போது உங்கள் வட்டி வீதம், அடமான தவணை முடியும் வரை மாறாமல் இருக்கும். ஐந்தாண்டுகளுக்கு நிலையான வட்டியில் கடன் பெறுகிறீர்கள் என்று கொள்வோம். அப்படியானால் மாதாமாதம் வட்டிக்கு எவ்வளவு போகின்றது. 5 வருட முடிவில் கடனில் அசல் எவ்வளவாக இருக்கும் என்பது உங்களுக்குத் தெளிவாகத் தெரியும்.

மாறும் வட்டியில், வட்டிவங்கியின் பிரைம் ரேட்டுக்கு (Prime Rate) ஏற்ப மாறுகின்றது. பிரைம் அல்லது முதன்மை வட்டி கூடும்போது உங்கள் கடனுக்கான வட்டியும் கூடும். முதன்மை வட்டி குறையும் போது உங்கள் கடனுக்கான வட்டியும் குறையும். முதன்மை வட்டி கனடிய (மத்திய) வங்கியின் வட்டி வீதத்தைப் பொறுத்தே அமையும். கனடிய வங்கி, கனடிய பொருளாதாரத்தின் தன்மைக்கு ஏற்றவாறு அவ்வப்போது 0.25 சதவீதம் அல்லது அதற்கு அதிகமாகமோ வட்டியை கூட்டவோ குறைக்கவோ செய்யலாம். மாறும் வட்டியைத் தெர்ந்தெடுத் தால் மாதாமாதம் கூட வட்டி மாறலாம். ஒரு நிலையற்ற தன்மை தென் பட்டாலும், மாறும் வட்டியைத் தேர்ந்தெடுத்த வர்களுக்கு, சமீப காலங்களில் கடன் பெருமளவு குறைந்துள்ளது. வட்டி நிலையாக அல்லது குறையும் போது உங்கள் அசலுக்குக் கணிசமான தொகை கூடுதலாகப் போகின்றது. வட்டியில் ஏறுமுகம் தென்பட்டால், இந்த மாறும் வட்டியைத் தேர்ந்தெடுக்கக் கூடாது. கடனைப் பெற விளையும் போது வட்டியை மட்டும் பார்க்கக் கூடாது. உங்கள் வருமானத்தையும் பார்க்க வேண்டும். செலவுக்கு என பட்ஜெட் போட்டு செலவு செய்தால், உங்களுக்கு மிகுந்த நன்மை கிடைக்கும்.

எல்லாவற்றையும் விட மிகமுக்கியமானது, தவணைப்படி காலந்தவறாமல் ஒழுங்காகக் கடனைத் திருப்பிச் செலுத்துதல் ஆகும். இல்லையேல் காமதேனுவாய் இருக்கும் கடன் பேயாக மாறி தொல்லை தரும். கடன் சரிதம் பழுதாகிப் போய் விடும். இதைப் பற்றி முன்பே எழுதியுள்ளேன்.

சில கடன்களும், லைன் ஆப் கிரிடிட்டும் சில சலுகைகளைத் தரக்கூடும். வட்டியும் குறைவாக இருக்கும். முழுக்கடனையும் கட்டாமல் இவற்றில் குறைந்த பட்ச தவணைப் பணத்தை மட்டும் கட்டி வரலாம். ஆனால் கிரிடிட் கார்டுகளில் இந்த விளையாட்டு கூடாது.

## செய்யும் தொழிலில் வெற்றி பெற

**கடனைப் பெற விளையும் போது வட்டியை மட்டும் பார்க்கக் கூடாது. உங்கள் வருமானத்தையும் பார்க்க வேண்டும். செலவுக்கு என பட்ஜெட் போட்டு செலவு செய்தால், உங்களுக்கு மிகுந்த நன்மை கிடைக்கும்.**

குறைந்த பட்ச தவணைப் பணத்தைப் மட்டும் கட்டி வந்தால் கூடுதல். வட்டி பெருத்த நட்டத்தை ஏற்படுத்தி விடும். எனவே கிரிடிட் கார்டுகளில் தவணைத் தேதிக்கு முன்னதாக முழுப் பணத்தையும் கட்டி விடுவதே நல்லது. உங்கள் நிதிநிலைமை மிக இறுக்கமாக இருக்குமானால், "வட்டி" மட்டும் கட்டக் கூடிய கடன்களை நிதிநிறுவனங்களிலும், வங்கி களிலும் கேட்டுப் பெறலாம்.

எந்தக் கடனையும் பெறுமுன் நீங்கள் யோசிக்க வேண்டியவை -

1. இந்தக் கடன் தேவைதானா? இதற்கு நான் கொடுக்கும் வட்டி அவசியமானதா?
2. திருப்பிச் செலுத்த எவ்வளவு காலம்பிடிக்கும்?
3. என்னுடைய மாதாந்திர வரவு எவ்வளவு? குடும்பச் செலவு எவ்வளவு?
4. வீட்டில் வரும் ஏனைய வருமானம் எவ்வளவு?

ஏற்கனவே நாலைந்து கிரிடிட் கார்டு மற்றும் பல்வேறு கடன்களைப் பெற்று, திருப்பிச் செலுத்தத் தடுமாறிக் கொண்டிருப்பீர்களேயானால் கடனை ஒருங்கிணைத்து (Consoli dation) மாதாமாதம் ஒரே ஒரு நிறுவனத்துக்குக் கடனைத் திருப்பிச் செலுத்தும் முறையை பின்பற்றலாம். உங்கள் கடன் சரிதம் நன்றாயிருந்தால் இந்த முறையில் கடன் கொடுக்க வங்கிகள் முன்வரலாம்.

கடன்கேட்டு விண்ணப்பிக்க இன்றைக்கு பல வழிகள் உள்ளன. இணையதளத்தின் மூலமாக விண்ணப்பிக்கலாம். தொலைபேசி மூலம் விண்ணப்பிக்கலாம். வங்கிக் கிளைக்கு நேரில் சென்றும் விண்ணப்பிக்கலாம். நீங்கள் எந்த முறையில் விண்ணப்பித்தாலும், கடன் கொடுக்கும் நிறுவனம், உங்களைப் பற்றிய விபரங்களின் அடிப்படையிலேயே கடன்தரும்.

உங்களைப் பற்றிய விபரங்களை நீங்களும் நிதி நிறுவனத்திற்குத் தருகிறீர்கள். கிரிடிட் பீரோவும் தருகின்றது. இந்த கிரிடிட் பீரோவின் கடன் சரிதத்தை நிர்வகிக்கும் தனியார் நிறுவனம், கனடாவில் 2 கிரிடிட் பீரோக்கள் இருப்பதைப் பற்றி முன்பே எழுதியிருக்கிறேன்.

## பெரி. முத்துராமன்

நீங்கள் முதன் முறையாக வங்கியில் கடன் பெறச் சென்றால், பொறுப்பாக கூட ஒருவரையும் உங்கள் கடனுக்காக கையெழுத்துப் போட வங்கி கோரலாம். அப்படிக் கோரினால் அதற்காக கவலைப்பட வேண்டாம். இது சாதாரண நடைமுறையே. வங்கி உங்களிடமிருந்து பல விபரங்களைக் கோரக்கூடும். உதாரணத்துக்குச் சில -

- கடனுக்கான காரணம்.
- நீங்கள் குடியிருக்கும், குடியிருந்த விலாசங்கள், தொலைபேசி எண்கள்.
- நீங்கள் வேலைபார்க்கும், வேலை பார்த்த நிறுவனங்களின் பெயர்கள் முதலியன.
- உங்கள் வருமானம் மற்றும் சில மாதாந்திர செலவுகளின் விபரம் (உதாரணம் - வாடகை).
- உங்கள் சொத்து மற்றும் கடன் விபரம்.

கடன் கொடுப்பவர்கள், சரித்திரம் திரும்பத் திரும்ப நிகழ்வதாக நம்புகிறார்கள். அதன் அடிப்படையில் உங்களிடமும் சில கேள்வி களைக் கேட்கக் கூடும். பதில் சொல்லத் தயாராயிருங்கள். உதாரணத்துக்குச் சில -

- உங்கள் வருமானத்தில் காணப்படும் கூடுதல் அல்லது குறையும் போக்கு.
- கடனைச் செலுத்துவதில் காணப்படும் தாமதம் அல்லது தாமதம் இன்மை.

ஏதோ ஒரு காரணத்திற்காக வங்கி கடன் தர மறுத்தால் காரணத்தைக் கேளுங்கள். அந்தக் குறையை நிவர்த்திக்க முடியுமா என்றும் பாருங்கள். உதாரணத்துக்குச் சிலவற்றைப் பார்ப்போம்.

- காரணம் - கேட்டிருக்கும் கடன் தொகை அதிகமானது.
- நிவராணம் - கடனைக் குறைத்துக் கேளுங்கள் அல்லது வேறு நிறுவனத்தை அணுகுங்கள்.
- காரணம் - தகுந்த பெறுமதி அல்லது செக்குரிட்டி இல்லை.
- நிவராணம் - தகுந்த பெறுமதியைக் கொடுங்கள். அல்லது உங்கள் சார்பாக கடன்பத்திரத்தில் கையெழுத்திட பெறுமதியான மற்றும் ஒருவரைப் பாருங்கள்.
- காரணம் - உங்கள் கடன்சரிதம் நன்றாக இல்லை.
- நிவாரணம் - குறிப்பாக என்ன சம்பவம் என்று கேளுங்கள். அந்தச் சம்பவம் தவறு ஏன்றால், ஆதாரத்துடன் கிரிடிட் பீரோவை அணுகி, அந்தப் பிழையைச் சரி செய்து கொள்ளுங்கள்.

இறுதியாக, கடன் ஒரு காமதேனு - அதை உபயோகிக்கத் தெரிந்திருந்தால், உபயோகிக்க அப்படி என்னதான் தேவை? கட்டுப்பாடு, சுய கட்டுப்பாடு.
ஒழுங்குமுறை, அடிப்படை ஒழுக்கம், வேறு என்ன? இவ்வளவுதான்.



மேலும் விபரம் அறிய விரும்பினால் பெரி. முத்துராமனுடன் 416-430-0623 இல் தொடர்பு கொள்ளலாம்.


**HOME INSPECTION**

• வீடு தரமானது என உறுதிப்படுத்திக் கொள்ள... • வீடு பராமரிப்பு பற்றி விளக்கமாகத் தெரிந்து கொள்ள...

**ந. தயாபரன்**

Certified Inspection Specialist

**Expert Building Inspections LTD.**

• Exceed the Standards • Industry Canada Registered • Professionals Serving the GTA • On site Report

24 /7 - Toll Free - **1.866.373.3315 416.727.8336**



**நாளையை இன்றே தொடுவோம்**



- கடந்த சில வருடங்களில் இன்ஸ்ரன்ஸ் பிரிமியம் குறைந்து வந்துள்ளது, உங்களுக்குத் தெரியுமா?
- உங்களுக்கு ஏற்ற காப்பீடு, சரியான பிரிமியத்தில் உள்ளதா என்று தெரிந்து கொள்ள வேண்டுமா?
- குழப்பம் தரும், காப்பீடு பற்றிய விவரங்களை இலகு தமிழில் புரிந்து கொள்ள வேண்டுமா? அப்படியானால் நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டியவர்.

பெரி. முத்துராமன் 416.430.0623.
A licensed broker, working for you.

இவர் எல்லாக் கம்பெனிகளின் பிரிமிய விவரத்தையும் கூறி, உங்களுக்கு ஏற்ற இன்ஸ்ரன்ஸையும் எடுக்க உதவுவார். பிறகென்ன! இழப்பதற்கு ஒன்றுமில்லை, எல்லாம் லாபம்தான்.

இன்றே தொடர்பு கொள்ளுங்கள் 416. 430.0623
A. Licensed borker working for you.

**பெரி. முத்துராமன்**, MBA, M.COM., PFPC

*Insurance Broker*

**Award Insurance Brokers inc.**

**Tel. 416-430-0623 Cell. 416-278-2026**



**விளம்பரம்** VLAMBARAM™

விளம்பரம் பத்திரிகை விளம்பரம் பப்கேஷன்ஸ் ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள்.




**பதிப்புரிமை:** 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ்.
விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.



Vlambaram, P.O. Box 37527, 31 Tapscott Road, Toronto, ON M1B 5P9, Canada
TEL: 416-282-8059, FAX: 416-282-4978
e-mail: vlambaram@sympatico.ca

# வைக்கோவுக்கு ஒரு தனி ஜாதகம்

**வைகோ - திறமையும் அதிஷ்டமும் ॥**



தனக்கென ஒரு கட்சி தொடங்கியதன் பின்னர் வைகோவின் செயல்கள் ஓர் ஊஞ்சலாட்டமா கவே இருந்தன. தனியாக நிற்பார். பின் அதிமுக வோடு சேர்வார். பின் அதில் இருந்து விலகி பின்னும் திமுக வோடு உறவு கொள்வார். 1993லிருந்து, வைகோ தான் சாட்சியாகவும் பாத்திரமாகவும் இருந்து பார்த்துக்கொண்டிருக்கும் தன் முன் நிகழ்வன வற்றிலிருந்து ஏதும் பாடம் கற்க மறுக்கின்றார் என்றே தோன்றும். தமிழ் நாட்டில் எந்த ஒரு பெரும் கட்சியும் தனித்து நின்று தேர்தலில் வெற்றி பெறுவது என்பது 1969க்கு பிறகு நடந்திராத ஒன்று. தேர்தலில் வெற்றி என்பது ஓர் அரசியல் கட்சிக்கு, அதன் அதிகார பலத்திற்கும், செல்வாக்கிற்கும் அவசியமான ஒன்று. மதிமுக, பாமாக, திமுக, அதிமுக, காங்கிரஸ் என இன்னும் பல கட்சிகள் அணி சேர்ந்தே தம்மை வாழ வைத்துக் கொண்டுள்ளன. பெரும் கட்சிகளான, திமுக, அதிமுக இரண்டுமே கிட்டத்தட்ட சரி சமமான, ஒன்று 30 மற்றது 35 சதவீதம் என மாறி மாறி வரும் பலம் கொண்டுள்ளவையாகவே தேர்தல்கள் நிரூபித்துள்ளன. 60 வருட அரசியல் வாழ்வில் கருணாநிதி இதை நன்கு தெரிந்து வைத்துக் கொண்டுள்ளார். கூட்டணி மூலம் கிடைக்கும் பலத்தை தன் பலமாகக் காட்டிக்கொள்ளும் சாமர்த்தியமும், வாசாலகமும் அவருடையது.

வைகோவின் துரதிஸ்டம், இரண்டு பெரிய கட்சிகளுமே அவரை மிகவும் நெருங்கமாக அண்டவிடாது தூரத்தில் எட்டியே வைத்திருக்கும். பெருங்கட்சிகளின் வெற்றிக்கு தம் கூட்டணியில் ஓர் அங்கமாகவே வைகோ

**கருணாநிதிக்கு, வைகோ எச்சரிக்கையோடு ஒதுக்கப்பட வேண்டிய, அவசியமானால் கிள்ளி எறியப்பட வேண்டிய எதிர்கால எதிரிதான். கருணாநிதி இல்லாத திமுகவில் வைகோவுக்கு ஈடான தலைமை, மக்கள் செல்வாக்கு கொண்டவர் யாரும் இல்லை. ஸ்டாலினால், வைகோவை அப்படியொன்றும் சுலபமாக புறமொதுக்கிவிட முடியாது.**

அவற்றிற்கு தேவைப்படுகிறார். வைகோ பொருட்படுத்தப்பட வேண்டிய தனித்துவம் கொண்ட தலைவர்தான். ஆனால் அவர் தனித்து நின்று தேர்தலில் ஒரு தொகுதியைக் கூட வெல்ல முடியாது. இது கருணாநிதியாலோ, ஜெயலலிதாவோலோ கூட முடியாது, எதிரே கூட்டணி ஒன்று நிற்குமானால். வைகோ ஓர் அணியில் சேர்ந்தால், 10-15 தொகுதிகளில் அந்த அணியின் வெற்றிக்கு அவர் பங்களிப்பு நிச்சயம். தென் மாவட்டங்களில் ஓர் அணியின் வெற்றி தோல்விகளை நிர்ணயிக்கும் அளவுக்கு, வாக்குகள் அவர் கையில் உள்ளன. இருப்பினும், அவர் ஓர் அணியின் தலைமையின் கீழ் கை நீட்டி கொடுத்ததை நன்றியுடன் பெற்றுக்கொள்ளும் நிலையிலேயே அவர் உள்ளார்.

கருணாநிதியிடம் கையேந்தி நின்று பெற்ற வேதனையை நினைத்து, ஜெயலிதாவின் அணியில் சேர்ந்தார். கிடைத்த வெற்றி, அவருக்கு, முன்னர் திமுக எம்.பி யாக இருந்து கிடைக்காத தேசிய பிராபல்யத்தை தந்தது. மத்திய அரசில் மந்திரியாகும்

**வெங்கட் சாமிநாதன்**

வாய்ப்பை வேண்டாம் என்று மறுத்துக் கொண்டார். அவர் இடத்தில், கருணாநிதியை வைத்துப் பார்ப்போமானால், அவர் பேரம் பேசி, கொடுக்கப்பட்டதற்கு மேல் பெற்றுப் பின் அதைத் தன் நட்பின் காரணமாகத் தான் செய்த உதவி என்றும் நம்பச் செய்வார். பின் ஜெயலிதா மத்தியில் அணி மாறியதும், திரும்பவும் திமுக அணியினராகும் நிலை முன்னின்றது. எதிர் அணியில் ஜெயலிதாவால்



யாரையும் பார்த்துச் சகித்துக் கொண்டிருக்க முடியாது. அதுவும் வைகோ போன்ற ஆவேசப் பேச்சாளராக ஒருவர் இருப்பின். வைகோ ஜெயலிதாவுக்கு சந்தர்ப்பத்தை தானாக உருவாகித்தருவார் என்பது என்னவோ நிச்சயம். ஆனால் கருணாநிதி அப்படிப்பட்டவர் அல்ல. அவருக்கு தேர்தலில் வெற்றி பெற, (ஒரு முறை பட்டது போதாதா என்ன?), மதிமுக- வின் வாக்குகளும், வைகோவின் ஆவேச பிரசார பலமும் தன் அணியின் வெற்றிக்கு (அதாவது, தன் கட்சியின் வெற்றிக்கு, அதாவது தன் குடும்பத்தின் நலனுக்கு, அதாவது, தன் மகன் ஸ்டாலின் முதல் மந்திரியாக முடிசூட்டப்படுவதற்கு) தேவை என்ற நிர்ப்பந்தத்தில், வைகோவை கட்டித் தழுவுவார். 'தம்பி!' என்று பாசம் பொங்கிட அழுவார். கண்ணீர் உகுப்பார். வைகோவும் தன் பங்குக்கு 'தலைவா' என்று கதறலாம். பின் இது அத்தனையும் பற்றி முரசொலியில் தானே தன் ப்ராண்டு (Brand) சொல்லலங்கார தலையங்கம் தீட்டுவார். பின் அது தன் 'நெஞ்சுக்கு நீதி' யின் ஆறாவது அல்லது ஏழாவது பாகத்தில் சேர்க்கப் பத்திரப்படுத்தப்படும். எல்லாமே நாடகம் என்று இருவருக்கும் தெரியும். உலகமும் அறியும். இருப்பினும் இருவரும் இந்த நாடகத்தை திரும்பத் திரும்ப தேவை பட்டபோதெல்லாம் நடிக்கத் தவறுவதில்லை. தனக்குத் தேவை என்றால், கருணாநிதி தேவைப்பட்ட அளவு புன்னகையும் தருவார். வசனமும் பேசுவார். தன் நலன் பாதுகாக்க தேவைப்பட்ட அளவு,


**தனக்குத் தேவை என்றால் கருணாநிதி தேவைப் பட்ட அளவு புன்னகையும் தருவார். வசனமும் பேசுவார். ஆனால் நடிகையாக இருந்து பெயரும் புகழும் பெற்ற ஜெயலலிதாவுக்கு இந்த நாடகங்களெல்லாம் அடியோடு மறந்து தான் போய்விட்டன. பொய்யான புன்னகைகளோ, வசனங்களோ கிடையாது.**

நேரம், தன்னை அருகில் நெருங்கவும் விடுவார். ஆனால் நடிகையாக இருந்து பெயரும் புகழும் பெற்ற ஜெயலலிதாவுக்கு இந்த நாடகங்களெல்லாம் அடியோடு மறந்து தான் போய்விட்டன. பொய்யான புன்னகைகளோ, வசனங்களோ கிடையாது. வேண்டும் போது கிடைக்காது என்றே தோன்றுகின்றது. ஜெயலலிதாவின் கதவு அடைக்கப்பட்டு, தான் சிறையில் அடைக்கப்பட்ட நிலையில், இந்த நாடகமும், கண்ணீரும் கருணாநிதிக்குத் திரும்பவும் தேவைப்பட்டன. அது அவரது பலம். இத்தகைய பலங்களாலும், யுக்தி களாலுமே வெற்றி அடைந்த சரித்திரம் அவரது.


பயங்கரவாதிகள் தடுப்புச் சட்டம் நாடாளு மன்றத்தில் வைகோவின் ஆவேச பேச்சின் ஆதரவில் தான் நிறைவேறியது. அதை நம்பியவர் அவர். ஆனால், திமுக, தான் தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசில் பங்கு கொண்டிருந்ததின் நிர்ப்பந்தத்தில் ஆதரவு தந்தது. இதன் பிறகும் இந்தியாவில் தடை செய்யப்பட்ட அமைப்புகளை 'இன்றும் ஆதரிக்கின்றேன், நேற்றும் ஆதரித்தேன், நாளையும் ஆதரிப்பேன்' என்று வைகோ பொதுக் கூட்டத்தில் வீர முழக்கமிடுவது, சட்டவிரோதம் என்பது வழக்கறிஞரான அவருக்குத் தெரியும் தானே. மகாத்மா மாதிரி, தெரிந்து செய்யும் சட்ட மீறல் என்றால் அதற்கு சிறை செல்ல தயாராக இருக்க வேண்டும். தானே வோட்டளித்து சட்டமாகிய சட்டத்தை மீறுவது வீரச்செயல் என்று எண்ணிச் செய்து, பின் ஜனநாயக உரிமை என்பது பைத்தியக்காரத்தனம். இந்த வீராப்புப் பேச்சினால், அவருக்கோ, ஈழத்தமிழருக்கோ ஏதும் பயனிருக்கவில்லை. முன்னரும், ரகசியமாக, கடல் கடந்து இலங்கை சென்று பெற்ற வில்லங்கம் போலத்தான் இதுவும். கருணாநிதியின் கண்ணீரையும், தம்பீ, அழைப்பையும் மறுபடி பெற வேண்டிற்று. கருணாநிதி பெற்றது, வைகோவின் பிரசாரத்தால், கூடுதல் தொகுதி வெற்றிகள். ஆனால் வைகோ தேர்தலிலேயே நிற்கவில்லை. இதை எப்படிப் புரிந்து கொள்வது?

இவ்வளவுக்கும் பிறகும், கருணாநிதிக்கு, வைகோ எச்சரிக்கையோடு ஒதுக்கப்பட வேண்டிய, அவசியமானால் கிள்ளி எறியப்பட வேண்டிய எதிர்கால எதிரிதான், தன் நலனுக்காகவும் தன் மகன் தடையின்றி முடி சூட்டப்படுவதற்கும். அதற்கு தேவையான நடவடிக்கைகள் கால தாமதமின்றி தொடங்கப் பட்டு விட்டற்கு, சாட்சியங்கள், வைகோ பேசும் கூட்டங்கள் திமுக வினால் சொல்லி வைத்தாற்போல் ஒதுக்கப்பட்டதும், கருணாநிதி யின் குடும்ப நிறுவனமான சன் தொலைக் காட்சிகளில் வைகோ திட்டமிட்டு இருட்டடிக் கப்படுவதும், வைகோவின் முக்கியத்துவத்தை முடிந்த அளவு குறைக்கும், அவர் அளவுக்கு மீறி வளர்ந்து விடாது கண்காணிக்கும் செயல்களே. இது வைகோவுக்கும் தெரிகிறது தான். அவர் கட்சித் தொண்டர்களின் முனுமுணுப்பையும் அவர் சமாதானப்படுத்த வேண்டியிருக்கின்றது தான். இருப்பினும் அவர் வாய் திறக்க முடியாத, அணியிலிருந்து வெளிநடப்பு செய்ய முடியாத நிலை. காரணம், அவரது தூரத்து அல்லது கிட்டத்து லட்சியம். கருணாநிதியின் மறைவுக்குப் பிறகு, திமுக-வைக் கைப்பற்றுவது.

கருணாநிதி இல்லாத திமுகவில் வைகோவுக்கு ஈடான தலைமை, மக்கள் செல்வாக்கு கொண்டவர் யாரும் இல்லை. ஸ்டாலினால், வைகோவை அப்படியொன்றும் சுலபமாக புறமொதுக்கிவிட முடியாது. அது இத்தகைய தொலை நோக்குகளுக்குப் பெயர் பெற்ற கருணாநிதிக்கு தெரிந்தே இருக்கிறது. அவர் வைகோவிடம் கொள்ளும் பயமும் இதுதான். ஆனால் இப்போது அவரை ஒதுக்கி விடக்கூடாது. தமிழ் நாட்டுத் தேர்தல் முடிந்து, ஸ்டாலின் முதல்வராக முடிசூட்டப்பட்ட பின் மறு நாளே செய்ய வேண்டிய வேலை அது. அதுவரை பொறுமை காக்க வேண்டும். பின் களை வெட்டி எறியலாம். அவசரமில்லை. இப்போது கண்காணிப்பு போதும். அமைதியான எச்சரிக்கை உணர்வுதான் தேவை.



வைகோ ஒரு நீண்ட பாத யாத்திரை மேற்கொண்டுள்ளார். தெற்கு கோடியிலிருந்து, சென்னை வரை. போகும் இடமெல்லாம் மக்களை சந்திக்கின்றார். பேசுகின்றார். ஆனால், ஜெயலலிதாவை எதிர்த்து ஒரு வார்த்தை பேசுதில்லை. யாரும் கேட்டால் 'எனது லட்சியம் அதுவல்ல. மக்களுக்கு வேண்டிய நல்ல விசயங்களைப் பேசுகின்றேன்.' என்கின்றார் வைகோ. ஆனால் கருணாநிதிக்கு கூரிய செவியுண்டே.



வைகோவின இடத்தில் யாரிருக்க விரும்புவார் கள்? அவரவருக்கு அவரவர் ஜாதகம். வைகோவிற்கு என்று தனி ஒரு ஜாதகம்.


**APPLEMORE AUTOMOTIVE**

உட்புற, வெளிப்பு திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility

- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing
- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

**416-285-4998**

435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6

SPECIAL



# வேண்டும் சமாதானம்




• கோடை 2004

• வெய்யில் London Victoria மாநகரத்து வீதிகளை மனிதர்களால் நிறைத்து கலகலப்பாக்கியிருந்தது.

•Westminster இல் சுழன்று கொண்டிருக்கும் London Eye இல் ஏறி ஒரு சுற்றுச்சுற்றுவதற்காக சாரிசாரியாக சென்று கொண்டிருக்கும் பல்லாயிரக் கணக்கான மனிதர்களின் கண்களில் படும்படியாக உலகசமாதானத்தை வலியுறுத்தும் பதாகையை பிடித்தபடி கால்கடுக்க நின்று கொண்டிருந்தார் இந்த "உயர்ந்த மனிதர்".

• இந்தக் காட்சியை ஏனோதானோ என்று பார்த்துவிட்டு பயணத்தை தொடர்ந்தவர்கள் பலர். ஒரு கணம் நின்று பார்த்து சிந்தித்துவிட்டுப் போனவர்கள் சிலர்.

• இன்னும் சிலர் தங்கள் Camera விற்குள் இந்தக் காட்சியை அடக்கிக் கொண்டனர். அந்தப் பெருமை எனது Camera வையும் சேர்ந்து கொண்டது.

•"இன்றைய உலகில் யுத்தம் தவிர்க்கமுடியாத ஒரு விடயம் அல்ல. அது இயல்பாகவே ஏற்பட்டு விடுவதும் இல்லை. ஆனால் மனிதரில் ஒருவர் எடுக்கும் முடிவின் விளைவே இந்தப் போரும் போரிழப்புக்களும்.

•ஆயுதங்களுக்காக 800 பில்லியன் டொலர்கள் விரையமாகின்றன. மனிதர்களுக்கு உணவூட்டவும், உறைவிடம் வழங்கவும் கல்விகற்பிக்கவும் இந்தப் பணத்தை செலவிடலாம், செலவிடமுடியும்" என்று வலியுறுத்துகின்றனர் இந்த மனிதரும் அவர் சார்ந்த "movement for the abolition of war" என்ற அமைப்பினரும்.

**சிந்திக்கப்படவேண்டிய வார்த்தைகள்!**

தவா மயில்வாகனம், கொலண்ட்

# அமைதிக்கு விடிவெள்ளி

பார்! பார்! பார்! நன்கு அவதானித்துப் பார் !
கூர் அலகதனில் போர்நிறுத்த ஓலையுடன் இதுவரை
யார் யார் எல்லாம் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த அமைதிப்புறா
விர் என வந்து சர் என அமர்ந்தே விட்டது.
போர் தீர்ந்து திடீர் என அமைதி அரும்பியிருக்கும்
தார்மீகச் சூழ்நிலை வேளைதனில்
போர்! போர்! போர்! போர்!
வஞ்சம் தீர்த்திடும் வன்முறைப்போர்!
கண்ணுக்குக் கண் பறித்து இருதரப்பும் குருடராகும் கொடும் போர்!
போரினால் மட்டும் தான் இனி
தீர்வு கண்டிடலாம். தமிழீழம் வென்றிடலாமென
சோர்வறியா எம் இளம் வீரர் வீராங்கனைகள்
மார்தட்டி மார்தட்டி மாண்டழுந்தொழிந்திடுவதையும்
நூர்ந்தணைந்திடும் மெழுகுவர்த்திகளாய் அங்கவீனமுற்று அல்லலுறுவதையும்
பார்த்துப் பார்த்துப் பரிதவித்து பரிதவித்துக்கொண்டு தமிழ்மக்கள் நாம்
சோர்ந்து சோர்ந்து சும்மா இருப்பதை விட்டொழித்து
சேர்ந்து உலகத் தமிழர் நாம் யாவரும் ஒருங்கிணைந்து
கூர்ந்து சகல அமைதி வழிமுறைகளையும் அலசி ஆராய்ந்து
சின்னஞ்சிறு தமிழீழம் அதற்கு
இன்னல் இடும்பை நெடுங்காலமாய்த் தந்து தொடர்ந்திட்ட
கன்னங்கரிய போர்க்காலத்தின் முடிவிற்கு முயற்சி ஒத்துழைத்து
ஆக்கவழிகள் அனைத்தையும் ஆரம்பித்து அமைதித்
தேர்வடம் பிடித்திழுத்திட ஆயத்தம்! இதோ நாம் அனைவரும் ஆயத்தம்!
உணர்ந்தெழுந்து ஒன்று சேர்ந்திடுவோம்.
அமைதி, அமைதி எமக்கினி அமைதி வேண்டும்.
கிளர்ந்தெழுந்து வெற்றிகரமாய் செயற்படுவோம்.
வாருங்கள்! வாருங்கள்!
ஒன்று சேர்ந்திடுவோம்.

லலிதா புரூடி

# அன்பினால் அகிலத்தை ஆளுவோம்

உலகம் எங்கும் அமைதி வேண்டும்.
உண்மை என்றும் வெல்ல வேண்டும்.
கலகம் அற்ற தேசம் வேண்டும்.
கலக்கம் இல்லா வாழ்க்கை வேண்டும்.
அடக்குமுறைக் கலாசாரம் அழிய வேண்டும்.
அதிகார வெறித்தனங்கள் மடியவேண்டும்.
இடர்படுவோர் துன்பங்கள் நீங்க வேண்டும்.
இன்னலற்று யாவருமே வாழவேண்டும்.
பண்பாளராய் மனிதரெல்லாம் மாற வேண்டும்.
பாரெங்கும் ஒற்றுமையைப் பேணவேண்டும்.
கண்ணியத்தை யாவருமே காக்க வேண்டும்.
கடமை தனில் நேர்மையுடன் நடக்கவேண்டும்.
வன்முறைகள் மறந்த மனங்கள் வேண்டும்.
வறுமையின் கொடுமைகள் நீங்க வேண்டும்.
அன்புள்ளோர் அகிலத்தை ஆளவேண்டும்.
அமைதியுற்று தேசமெல்லாம் செழிக்க வேண்டும்.
இன்பமுடன் யாவருமே வாழ வேண்டும்.
இறைவனின் திருவருள் கிடைக்கவேண்டும்.

புங்கை, எம். எம். குமார். மானிப்பாய்

தமிழர் நிர்வாகத்தில் ஒரு
EMBASSY
விசா கிடையாது, பாஸ்போட் வழங்கப்படமாட்டாது
ஆனால்
• வீட்டிற்குத் தேவையான தரமான உணவுப் பொருட்கள், (Groceries)
• இலங்கை / இந்திய இனிப்புப் படையல் (Sweets)
• இலங்கை / இந்திய உணவகம் (Restaurant)
416-332-8451
Finch / Middlefield
5200 Finch Ave., Scarborough
சமோசாவிற்கு அழையுங்கள்
416-332-0944



சமர்பனா டான்ஸ் அகடமி
Samarpana Dance Academy
தேவா குணசீலன்
Artistic Director & Principal
பரத நாட்டிய வகுப்புக்கள் கலாஷேத்ரா பாணியில் ( Kalakshetra Style) நான்கு இடங்களில் (4 locations) கற்பிக்கப்படுகின்றது.
East York, Scarborough, Markham, Brampton
வயதிற்கு ஏற்ப தனி வகுப்புகள் உள்ளன. All age groups welcome.
ஆண்டு பரீட்சைகள், பள்ளி ஆண்டுவிழா, சான்றிதழ்கள் வழங்கப்படும். அரங்கேற்றம் நடத்தப் படும். மேலும் அரங்கேற்றம் முடித்தவர்கள், பல மேடைகளில் நடனம் புரிய விரும்புபவர்களும் (Stage Performance), மற்றும் புதிதாக சேர விரும்புபவர்களும் அழையுங்கள்.
416.944.2392
gunadance@yahoo.com
Admisions open till vijayadashimi






தமிழ் மக்களின் நெருங்கிய நண்பர்
ரவி நடராஜா
• வாகன விபத்துக்குள்ளாகியவரின் இழப்பீடு பற்றிய தகுந்த ஆலோசனைகள் வழங்கப்படும், உரிய இழப்பீடுகள், மற்றைய இழப்பீடுகள், விபத்துக்குள்ளாகியவரின் சம்பள இழப்பீடுகள் மற்றும் வாகன விதி முறைகளை மீறிய குற்றங்கள் Accident & Traffic Ticket
(14 Years Insurance Claims Experience)
416-245-6555 2095 Weston Road, Suite 203, Toronto, ON
416-755-2801 2390 Eglinton Ave., E. Suite 223, Scarborough. ON



வீட்டில் பூச்சி, எலித் தொல்லையா?
வீடுகள், தொடர்மாடி வீடுகள், தொழிற்சாலைகள், வியாபார நிலையங்கள் போன்றவற்றில் பூச்சி, எலித் தொல்லையா? கவலையை விடுங்கள். முற்றாக ஒழிக்க அழையுங்கள்
Kanthan: 416.291.3997







• No Spraying • No Smelling • No Moving

# அமெரிக்காவிற்கு "ஆண்டவன்" கொடுக்கும் தண்டனை

ஆண்ட்ரு, அலிசியா, சார்ளி, அய்வன், பிரான்சஸ், ஜெஸ்சல், ஓபல், கிளியோ யார் இவர்கள் எல்லாம்? இவர்களின் பெயர்கள் சாதாரணமாக மனிதர்களின் பெயர்களாக இருந்த போதும், குறிப்பிட்ட அந்தப் பெயர்கள் இயற்கை அன்னையின் பிள்ளைகளின் பெயர்கள் என்று கூடச் சொல்லலாம். என்ன ஒரே உளரலாக இருக்கின்றது என்று எண்ணுகிறீர்களா? அது தான் இல்லை. பூமியின் பல பகுதிகளிலும் காலநிலை மாற்றங்களினால் ஏற்படுகின்ற கடும்புயல், சூறாவளி என்று கூறப்படுபவைகள் வருடங்கள் தோறும் பூமியின் பல பாகங்களையும் பதம்பார்த்துக் கொண்டு இருக்கின்றன. பெரும் சேதங்கள் பல நாடுகளிலும் பல பில்லியன் டொலர்களுக்கு மேலாக விழைவிக்கும் புயற்காற்றுக்களிலும், சூறாவளிகளிலும் மனித உயிர்ச் சேதங்களையும் தமது பங்கிற்கு விழைவித்த வண்ணம் இருக்கின்றன. அவற்றின் பெயர்கள் மேற்கூறிய மனிதனின் பெயர்களே.

## சாதாரண மனிதன் சிந்தனையிலிருந்து

இன்று விஞ்ஞானத்தின் வளர்ச்சியின் உதவியால் பாரிய புயற்காற்றுகளும், சூறாவளிகளும் ஆரம்பிக்கும் போதே வானியல் கண்காணிப்பு நிலைய நிபுணர்களால் கண்டறியப்பட்டு அவை தாக்க இருக்கும் பகுதிகளுக்கு முற்கூட்டியே அறிவிக்கப்பட்டு அந்தப் பகுதிகளில் வாழும் மக்களுக்கு எச்சரிக்கை செய்து அவர்களை பாதுகாத்துக் கொள்வதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளப்படுகின்றன. எது எப்படியாக இருந்த போதும் சூறாவளிக் காற்றின் பாதிப்பை தடுப்பதோ முடியாத



காரியமாகவே இன்றும் உள்ளது. பணபலம் கொண்ட அமெரிக்கா போன்ற மேற்குலக நாடுகளாலேயே சேதம் கட்டுக்கடங்காமல் இருக்கின்ற வேளையில், இயற்கையின் சீற்றத்தை கட்ட முடியாமல் பாதிக்கப்படும் நாடுகளில் பங்களாதேஷ் போன்ற வறிய நாடுகள் படும் நட்டம் சொல்லி முடியாது. இயற்கை அன்னை தனது சீற்றத்தில் பாரபட்சம் பார்ப்பதில்லை என்பதை புயலினால் பாதிக்கப்பட்ட நாடுகளின் பாதிப்பை அது அமெரிக்காவாக இருந்தால் என்ன பங்களாதேஷ் ஆக இருந்தால் என்ன பார்க்கும் போது புலப்படும்.

ஈழ மண்ணில் வடக்குப் பிராந்தியத்தில் 1966 ஆம் ஆண்டளவில் அடித்த சூறாவளியின் பாதிப்பால் உயிரிழந்த தமிழ் மீனவர்களின் எண்ணிக்கையையும் 1978 ஆம் ஆண்டில் மட்டக்களப்பு பகுதிகளில் ஏற்படுத்திய பாரிய சேதங்கள் உடனே நிறைவுக்கு வந்தபோதும், இடையிடையே வந்து சென்ற சிறிய அளவிலான புயற்காற்று சம்பவங்களும் ஞாபகத்திற்கு வருகின்றன. பூமியை சுற்றியுள்ள வாயு மண்டலத்தில் வெப்பம், குளிர் போன்றவற்றால் ஏற்படும் தாக்கத்தின் விழைவாக உருவாகும். இவை போன்ற புயற்காற்றுக்களும், சூறாவளிகளும் எப்படி, எங்கு தோன்றியது. அது அந்த திசை நோக்கி நகர்ந்தது. சென்ற பாதையில் அவை எப்படியான சேதங்களை விளைவித்தன என்பது பற்றி எல்லாம் படித்து, ஆராய்வதன் மூலம் எதிர்காலத்தில் மனிதர்களை காத்து கொள்வதற்கு அந்த விவரங்கள் உதவியாக இருக்கும் என்பதனாலும் ஒரே நாளிலேயே பல சூறாவளிக்காற்றுக்கள் உருவாவதினாலும், அவற்றை தனித்தனியே பிரித்து அறிந்து கொள்வதற்காக தனிப் பெயர்களை அவற்றிற்கு கொடுத்து அவற்றை இனம் காண்கின்றார்கள். அதற்கு இலகுவாக இருப்பதற்காக கொடுக்கப்பட்ட பெயர்களே ஆண்ட்ரு, சார்ளி, தற்போது கிரனேடா, ஜமாய்க்கா, கியூபா போன்ற நாடுகளை ஆட்டிப்படைக்கும் அய்வன் ஆகியவையாகும். 1992 ஆம் ஆண்டு புளோரிடா மாநிலத்தை தாக்கிய ஆண்ட்ரு விளைவித்தது 26 அமெரிக்க பில்லியன் டொலர் பெறுமதியான சேதம் ஆகும். அண்மையில் 12 வருடங்களிற்கு பின்பு வந்த சார்ளியும் ஏறக்குறைய 20 பில்லியன் டொலர்களுக்கு ஈடான சேதங்களை விளைவித்தது.

கடந்த சில நாட்களாக கரிபியன் நாடுகளான அதிலும் வறிய நாடுகள் என்று அழைக்கப்படக்கூடிய கிரனேடா, ஜமேயக்கா, கியூபா போன்ற நாடுகள் முற்றாக அழிக்கப்படும் அளவிற்கு அய்வன் என்ற சூறாவளிக் காற்றால் தாக்கப்பட்டு கொண்டு இருக்கின்றன. இயன்றவரையில் நடவடிக்கை எடுக்கப்பட்டதனால், வானிலை ஆராய்ச்சி நிலையங்களால் கண்டறியப்பட்டு எச்சரிக்கை செய்யப்பட்டு இருந்தும் எழுபது மனித உயிர்கள் பலியாகி உள்ளன. அமெரிக்காவிற்கு அருகிலேயே இருக்கும் வறிய நாடுகளிற்கு அமெரிக்காவின் தயவால் இது பற்றிய விவரங்கள் முன்கூட்டியே கொள்ளக் கூடியதாக இருக்கின்றது.

உலகிலேயே வறுமை, போர் போன்ற மனிதரால் தோற்றுவிக்கப்பட்ட மனித உயிர் அழிவுகளுடன் இயற்கையின் சீற்றமும் சேர்ந்து இருப்பது கவலைக்குரியதே. ஆனால் அது ஒருவகையில் அமெரிக்காவை வசைபாடுபவர்களிடம் இருந்து அமெரிக்காவை காப்பாற்றுகின்றது என்றும் சொல்லலாம். உலக வல்லரசு நாடாக விளங்கும் அமெரிக்கா, ஈராக், ஆப்கானிஸ்தான் போன்ற பாரிய போர்களையும், மற்றைய நாடுகளில் சிறிய அளவில் உள்நாட்டு யுத்தங்கள் நடப்பதற்கு காரணமாக இருக்கின்றது. பூமி சாஸ்திரம் என்று ஒன்று இருப்பதனால் அமெரிக்க கண்டத்தில் மக்கள் வாழாமல் இருந்த காலம் முதலே இப்படியான இயற்கையின் தாக்கத்தினால் பாதிப்பு இருந்து வருகின்றது என்று மக்கள் அறிந்து வைத்துள்ளார்கள். இல்லாவிட்டால் அமெரிக்காவின் செய்கைகளுக்காக கண்டனம் தெரிவிக்க விரும்புபவர்கள் தமது இறைவன் அமெரிக்காவிற்கு கொடுக்கும் தண்டனை தான் இந்த அழிவுகள் என்று அமெரிக்காவிற்கு எதிரானவர்கள் கொண்டாடி இருக்கவும் செய்திருப்பார்கள்.

*சிந்தனை தொடரும்*

பரம் ஜி

ஒரு சாதாரண மனிதன்

# இலங்கைத் தமிழர்களின்....

இந்திய அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டுவருமாறு இலங்கையின் சுற்றாடல் வெளிவிவகார அமைச்சு, சுற்றாடல் துறை அமைச்சைக் கேட்டுள்ளது.

இந்தத் திட்டம் தொடர்பாக இந்திய அரசாங்கத்துடன் சர்ச்சையிலீடுபடாமல் பேசித் தீர்வு காண்பதற்கான வழிவகைகளை ஆராய்ந்து கொண்டிருப்பதாக சுற்றாடல்துறை அமைச்சர் ஏ.எச்.எம். பௌசி தெரிவித்திருக்கிறார்.

நாக்பூரிலுள்ள தேசிய சுற்றாடல் பொறியியல் ஆராய்ச்சி நிறுவனம் சேது சமுத்திரத் திட்டத்தின் சுற்றாடல் தாக்க மதிப்பீடு குறித்து இத்திட்டத்தில் மிக முக்கியமாக சம்பந்தப்படும் இலங்கையுடன் கலந்துரையாடத் தவறவிட்டது என்றும் இது குறித்து இந்திய அரசாங்கத்துக்கு அறிவிக்கப்படுமெனவும் இராஜதந்திர மோதல்கள் மற்றும் சர்வதேச சட்ட ரீதியான பிணக்குகளை தவிர்த்து இப்பிரச்சினைக்கு இணக்கமான தீர்வைக் காண முயற்சிப்பதாக அமைச்சர் பௌசி கூறியுள்ளார்.

கிழக்கு - மேற்கு கடற் பயணத்தில் கேந்திர நிலையமாக கொழும்புத்துறைமுகம் இருக்கிறது. பிராந்திய பொருளாதாரத்தில் தெற்காசியா வலுவடைந்து வரும்நிலையில் சேது சமுத்திரத்திட்டம் இலங்கையின் எதிர் காலத்துக்கு பாரிய தாக்கத்தை ஏற்படுத்துமென்ற பீதியும் தோன்றியுள்ளது. ஆனால், மன்னாரில் சர்வதேச துறைமுகம் ஒன்றை அமைப்பதன் மூலமும், வீதி, புகையிரதப் பாதை கட்டமைப்பை மன்னாருடன் ஏனைய இடங்களுக்கு ஏற்படுத்துவதன் மூலமும் இந்தப் பாதிப்பை தவிர்க்க முடியுமென ஆலோசனை தெரிவிக்கப்படுகிறது.

ஆனால், இலங்கையில் சமாதானத் தீர்வு காணப்படாதவரை இந்த யோசனை பலன் தரப்போவதில்லையென ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். சேது சமுத்திரத் திட்டத்தால் கொழும்புத் துறைமுகத்தில் முக்கியத்துவம் குறைந்து விடுமென்ற அச்சம் தென்னிலங்கையில் பரவலாக எழுந்துள்ளது.


சர்வதேசக் கப்பல்கள், தற்போது இந்தியாவுக்கு செல்லாமல் இலங்கையையே சுற்றிச் செல்லுகின்றன. சேது சமுத்திர திட்டத்தின் படி எல்லாக் கப்பல்களும் இலங்கைக்கு வராமல் இந்தியாவுக்கே செல்லும். இந்த சேது கால்வாய் திட்டத்திற்கு இந்தியா செலவிடப் போகும் மொத்த செலவை 12 வருடங்களில் திரும்பி எடுத்துவிடும். ஆனால் தமிழ் ஈழத்தின் நிலை என்ன?

இந்தியாவில் நேரு மாமா ஆட்சியில் இருந்த ஒரு சமயம் இந்த சேது கால்வாய் திட்டத்தை அமுல்படுத்தும்படி கோரிக்கை எழுப்பப்பட்டது. அச்சமயம் இலங்கை அரசு 'எங்கள் நாடு நசிந்து போய்விடும்' என்று நேருவிடம் கோரிக்கை விட்டது. அண்டை நாடுகளின் நலனில் அக்கறை கொண்டிருந்து ஆசியாவின் மாபெரும் தலைவனான ஜவகர்லா நேரு இந்த சேது கால்வாய்திட்டத்தை குப்பையில் போட்டுவிட்டார்.

ஆனால் இன்று???

# பின்லேடன் கைது?

## ரஷ்ய இணையத்தளம் பரபரப்பான தகவல்



ஓசாமா பின்லேடனை, பாகிஸ்தான் இராணுவம் கடந்த மாதமே பிடித்து விட்டதாக, ரஷ்ய இணையத்தளமான புரோ பைன்ட் பேஜஸ். Com பரபரப்பான தகவலை வெளியிட்டுள்ளது. பாகிஸ்தானின் வடக்கில் இருக்கின்ற சித்ரால் என்ற பகுதிக்கும், பெஷாவர் நகருக்கும் இடையிலான பகுதியில் வைத்து பாகிஸ்தான் இராணுவம் பின்லேடனை கைது செய்து விட்டது இந்த கைது விவகாரம் உடனடியாக மூடி மறைக்கப்பட்டுவிட்டது. அடுத்த மாதம் அளவில் அதிகாரபூர்வமாக இந்த திமிங்கிலம் சிக்கிய விடயம் உலகத்திற்கு அமெரிக்காவினால் அறிவிக்கப்படும் என்றும் இந்த இணையத்தளம் கூறியுள்ளது.

இதன் பின்னர் செய்தி வெளியிட்டுள்ள ரஷ்ய பத்திரிகைகள், 'பின்லேடன் தற்சமயம் அமெரிக்க பாதுகாப்பு அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளான்' என்று தெரிவித்துள்ளன.

இதே சமயம் ரஷ்ய பத்திரிகையாளருக்கு பேட்டி அளித்த பாகிஸ்தான் தகவல் துறை மந்திரி Sheikn Rashid Ahmed 'தாக்குதல்களில் இருந்து தப்பி, தப்பி ஓடிக்கொண்டேயிருந்த போதே பின்லேடன் இறந்து போயிருப்பான்' என்று கூறியள்ளார். அதற்கு முற்றிலும் மாறுபாடாக, அமெரிக்க Secretary of State கோலிங் பவல், 'பின்லேடன் உயிருடன் இருப்பதாக தான் நம்புவதாயும், அவன் உயிர் தப்பி ஓடிக்கொண்டே இருக்கின்றான்' என்றுடம் குறிப்பிட்டுள்ளார். செப்ரெம்பர் 11ன் மூன்றாவது ஆண்டு நினைவு நிகழ்சிகளை முடித்துக் கொண்டு பத்திரிகைகளுக்கு பேட்டி அளித்த அமெரிக்க கமாண்டோ உயர் அதிகாரியான, Maj. Gen. Eric Olson 'பின்லேடன், தாக்குதல்களுக்கான கட்டளைகளை இட்டுக் கொண்டே இருக்கின்றான்' என்று கூறியுள்ளார்.

பின்லேடன் ஏற்கனவே பிடிபட்டிருந்தால் அந்த செய்தியை உடன் வெளியிடாமல் வைத்திருப்பதன் காரணம் என்ன? என்ற கேள்வியும் எழுப்பப்பட்டுள்ளது. அமெரிக்க அதிபருக்கான தேர்தல் நெருங்குகின்ற சமயம் இந்த செய்தியை வெளியிட்டு, இழந்து போன செல்வாக்கை மீண்டும் நிலை நிறுத்த, புஷ் திட்டமிடுகின்றரா? என்ற சந்தேகம் தெரிவிக்கப்பட்டுள்ளது.




வீட்டில் - முதலீடு வீண்விரயமாவதில்லை....
வீட்டில் - முதலீடே எம் வாழ்க்கைக்கு மூலதனம்!
பாதுகாப்பாக உங்கள் பணத்தை வீட்டில் முதலிட்டு
வாழ்க்கையில் வெற்றிபெற அழையுங்கள் பரம். ஜி
பாடுபட்டு உழைத்த பணத்தை வீடுகளில்
முதலிடும் வழிகளை அறிய நாடுங்கள்

Param Gnana
Sales Representative
HomeLife GTA
Realty Inc.

HOMELIFE HIGHER STANDARDS

www. themathuram.com

Cell: 416 230 1107 Bus: 416 321 6969
Res: 905 670 9969 (Mississauga)



# சிறிலங்கா அணி தென்ஆபிரிக்கா அணியை (WHITE WASH) செய்து தோல்வி அடைய வைத்தது.




கோப்பையை வென்ற மகிழ்ச்சியில் இலங்கை அணி வீரர்கள்

கொழும்பில் நடைபெற்ற தென்னாபிரிக்க அணிக்கு எதிரான 5ஆவது ஒருநாள் போட்டியில் இலங்கை அணி 49 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று தென்னா பிரிக்க அணிக்கு எதிரான ஒருநாள் தொடரை 5-0 என்ற கணக்கில் கைப்பற்றியது.

Toss இல் வென்ற தென்னாபிரிக்க அணியின் தலைவர் கிரேம் ஸ்மித், சிறிலங்கா அணியை முதலில் ஆடுமாறு கேட்டுக் கொண்டார். ஜெயசூர்யா மற்றும் சங்ககாராவின் சிறப்பான ஆட்டத்தினால் சிறிலங்கா அணி 50 ஓவர்களில் 8விக்கெட் இழப்பிற்கு 308 ஓட்டங்கள் எடுத்தது. இலங்கை அணியின் ஆரம்ப ஆட்டக்காரர்களில் குணவர்த்தனே, முதலாவது ஓவரிலேயே ஓட்டம் எதுவும் எடுக்காமல் ஆட்டமிழந்துவிட, ஜெயசூர்யாவு டன் ஜெயந்தா 2-வது விக்கெட்டிற்கு ஜோடி சேர்ந்தார். இருவரும் சேர்ந்து கூட்டாக 125 ஓட்டங்களை எடுத்து அணியை ஆரம்பச் சரிவிலிருந்து மீட்டார்கள். 68 பந்துகளில் 51 ஓட்டங்கள் எடுத்து அரைசத்தை கடந்த பின்னர், குளுஸ்னர் பந்துவீச்சில் பந்துக்காப்பாளர் பௌச்சரிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார் ஜெயந்தா. ஜெயசூர்யாவும், சங்ககாராவும் இணைந்து சிறப்பாக ஆடி தென்னாபிரிக்க அணியின் பௌலர்களுக்கு தொடர்ந்து நெருக்கடி கொடுத்தனர். 85 பந்துகளை எதிர்கொண்டு 79 ஓட்டங்கள் எடுத்து நன்றாக ஆடிக்கொண்டிருந்த, ஜெயசூர்யாவை ஸ்மித் வீசிய பந்து பெவிலியனுக்கு அனுப்பியது. ஜெயசூர்யா ஆட்டமிழந்தபோது இலங்கை அணி, 28 ஓவர்களில் 3விக்கெட் இழப்பிற்கு 164 ஓட்டங்கள் எடுததிருந்தது. Low Middle Order இல் இறங்கிய ஜெயவர்த்தனேவும் நன்றாக ஆடி தன்பங்கிற்கு 39 ஓட்டங்கள் எடுத்து அணிக்கு உதவினார். சங்ககாராவுடன் சேர்ந்து அவர், 4-வது விக்கெட்டிற்கு 84 ஓட்டங்கள் எடுத்தார். 57 பந்துகளில் அரைசதத்தை கடந்த சங்ககாரா, தொடர்ந்து ஆடி 72 ஓட்டங்கள் எடுத்ததுடன் ஆட்டமிழந்தார்.

தென்னாபிரிக்க அணியின் பௌலர்களில் லாங்க்வெல்ட் சற்று பொறுப்பாக பந்துவீசி 7ஓவர்களில் 31 ஓட்டங்களை கொடுத்து 3விக்கெட் வீழ்த்தி இலங்கை வீரர்களை ஓரளவிற்கு கட்டுப்படுத்தினார். மற்ற பௌலர்கள் எல்லோரும் சற்று தாராளமாக ஓட்டங்களை கொடுக்க, இலங்கை 50 ஓவர்களில் 8விக்கெட் இழந்து 308 ஓட்டங்கள் எடுத்தது.

309 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை துரத்திய தென்னாபிரிக்க அணி, மூன்றாவது ஓவரிலேயே கிப்சின் விக்கெட்டை இழந்தது. நூவான் சொய்சாவின் பந்தில் கிளீன் போல்டு ஆன கிப்ஸ் 6 ஓட்டங்கள் மட்டும் எடுத்தார்.

மற்றொரு ஓப்பனரான அணித்தலைவர் ஸ்மித்தும் சொற்ப ஓட்டங்களில் (25) ஆட்டமிழந்து அதிர்ச்சியூட்டினார். காலிசும், ருடால்ஃபும் இணைந்து 3-வது விக்கெட்டிற்கு பொறுப்பாக ஆடி, 139 ஓட்டங்களை எடுத்தார்கள். எனினும் தென்னாபிரிக்க அணியின் வெற்றிக்கு தேவைப்படும் ஓட்ட வீதம் உயர்ந்து கொண்டே போனது. ருடால்ஃப் 48 ஓட்டங்களை எடுத்து 35-ஆவது ஓவரில் ஆட்டமிழக்க மற்றொரு முனையில் காலிஸ் அசராமல் நின்று ஆடினார்.

69 பந்துகளில் அரைசதத்தை கடந்த காலிஸ், தொடர்ந்து அதே ரீதியிலேயே ஆடி அடுத்த அரைசதத்தையும் எட்டி, கொழும்பு ஆடுகளத் தில் தனது முதலாவது ஒரு நாள் சதத்தை பதிவு செய்தார். டால்ஃபின் விக்கெட்டை கைப்பற்றி தொடர்ந்து சிறப்பாக பந்துவீசிய உபுல் சந்தானாவிடம் தென்னாபிரிக்க வீரர்கள் ஒருவர் பின் ஒருவராக ஆட்டமிழக்க, மற்றொரு முனையில் பந்துவீசிய ஜெயசூர்யா வும், தென்னாபிரிக்க வீரர்களுக்கு கடும் நெருக்கடியை கொடுத்தவண்ணம் இருந்தார்.

101 ஓட்டங்கள் எடுத்து சந்தானாவிடம் விக்கெட்டை பரிசாக அளித்துவிட்டு ஆட்ட மிழந்தார் காலிஸ். அவர் ஆட்டமிழந்த பிறகு இலங்கை அணியின் வெற்றி எளிதாகக் கைகூடியது. 9.1 ஓவர்களில் 61 ஓட்டங்கள் எடுத்து 5விக்கெட் வீழ்த்திய சந்தானா, இப்போட்டியின் ஆட்டநாயகனாக தேர்வானார். 10 ஓவர்களில் 47 ஓட்டங்கள் எடுத்து 3விக்கெட் வீழ்த்தி All Runder ஜெயசூர்யா.

48.1 ஓவர்களில் 259 ஓட்டங்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 49 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது தென்னா பிரிக்கா. 5 போட்டிகள் கொண்ட இந்த ஒரு நாள் தொடரில் இலங்கை அணி ஐந்திலுமே வென்று WHITE WASH வெற்றியை பெற்றது. இத்தொடரின் தொடர் நாயகனாக, இலங்கை அணியின் விக்கெட் காப்பாளர் சங்ககாரா தேர்வு செய்யப்பட்டார்.

## ரெஸ்ட் போட்டி தரப்பட்டியல்

### டிராவிட் - முரளிதரன் முதலிடம்

ரெஸ்ட் போட்டிக்கான சர்வதேச தரப்பட்டியலில் துடுப்பாட்டக்காரர் வரிசையில் ராகுல்டிராவிட்டும், பந்துவீச்சாளர்கள் வரிசை யில் முத்தையா முதளிதரனும் முதலிடத்தைப் பிடித்துள்ளனர். பிரைஸ் வாட்டர் கூப்பர்ஸ் நிறுவனம் சமீபத்தில் ரெஸ்ட் போட்டி வீரர்களுக்கான சர்வதேச தரப்பட்டியலை வெளியிட்டது. இதில் டிராவிட் மற்றும் முரளிதரன் ஆகியோர் முதலிடம் பெற்றுள்ள னர். துடுப்பாட்டக்காரர்களுக்கான தர வரிசையில் முதலிடம் பிடித்துள்ள டிராவிட் 892 புள்ளிகளையும், 58.09 சராசரியையும் பெற்றிருக்கிறார். பந்துவீச்சாளர்கள் வரிசை யில் முத்தையா முதளிதரன் 886 புள்ளிகளு டன் 22.76 சராசரியைக் கொண்டிருக்கிறார். இதற்கு முன்னதாக துடுப்பாட்டக்காரர்கள் வரிசையில் மேற்கு இந்திய தீவுகளின் அணித் தலைவர் பிரையன் லாரா முதலிடத்தில் இருந்தார். ஆனால் இங்கிலாந்தில் லார்ட்சில் நடைபெற்ற போட்டியில் அவர் தோல்வியடைந்ததால் முதலிடத்தை இழக்க வேண்டியதாயிற்று. இந்தியாவின் அதிரடி வீரர் டெண்டுல்கர் 784 புள்ளிகளுடன் 8-வது இடத்திலும், மற்றொரு அதிரடி வீரரான வீரேந்தர் ஷேவாக் 782 புள்ளிகளுடன் 9-வது இடத்திலும் உள்ளனர். அவுஸ்திரேலிய முன்னணி துடுப்பாட்டர்களான மேத்யூஹேடன் 889 புள்ளிகளைப் பெற்று இரண்டாவது இடத்திலிருக்கிறார். லாரா 881 புள்ளிகளுடன் 3-வது இடத்தை பிடித்திருக்கிறார். தென்னாபிரிக்க வீரர் ஜாக்ஸ்காலிஸ் 4-வது இடத்திலும் அவுஸ்திரேலிய அணித்தலைவர் ரிக்கிபாண்டிங் 5-வது இடத்திலும் உள்ளனர். மற்றொரு தென்னாபிரிக்க வீரரான லான்ஸ்கிபஸ் 815 புள்ளிகளுடன் 6-வது இடத்திலும், பாகிஸ்தான் அணித்தலைவர் இன்சமாம் உல்ஹக் 785 புள்ளிகளுடன் 7-வது இடத்திலும், ரிச்சர்ட்சன் 761 புள்ளிகளுடன் 10-வது இடத்திலும் உள்ளனர்.

இங்கிலாந்து வீச்சாளர் ஹார்மிசன் 864 புள்ளிகளுடன் 2 ஆவது இடத்தைப் பிடித்துள்ளார். இந்தியச் சுழற்பந்து வீச்சாளர் கள் கும்ப்ளே 7-வது இடத்திலும் ஹர்பஜன்சிங் 10-வது இடத்திலும் உள்ளனர். தென்னா பிரிக்க பந்துவீச்சாளர் போலக் 837 புள்ளிகளு டன் 3-வது இடத்திலும், பாகிஸ்தான் வேகப்பந்து வீச்சாளர் சோயித் அக்தர் 826 புள்ளிகளுடன் 4-வது இடத்திலும் உள்ளனர்.

அவுஸ்திரேலிய பந்துவீச்சாளர்கள் மெக்ராத் 5-வது இடத்திலும், வார்னே 6-வது இடத்திலும் உள்ளனர். மற்றொரு அவுஸ்திரேலிய பந்துவீச்சாளரான கில்லெஸ்பி 740 புள்ளிகளுடன் 8-வது இடத்திலும், தென்னாபிரிக்க வீரர் நிதினி 722 புள்ளிகளுடன் 9-வது இடத்திலும் உள்ளனர். லார்ட்சில் நடந்த முதலாவது ரெஸ்ட் போட்டியில் சிறப்பாக பந்துவீசிய ஆஷ்லேகெய்ல்ஸ் சிறந்த பந்து வீச்சாளர்களுக்கான தரப்பட்டியலில் 20-வது இடத்தைக் கைப்பற்றியிருக்கிறார். இவர் முதன்முறையாக இப்பட்டியலில் இடம் பெற்றுள்ளார்.

இப்போட்டியில் பொதுவாக பந்துவீச்சாளர் களை துடுப்பாட்டவீரர்கள் திணறடித்தனர். ஆனால் கெய்லஸ் சிறப்பாக பந்துவீசி, 210 ஓட்டங்களை எடுத்து 9விக்கெட்டுக்களை வீழ்த்தியது நினைவு கூரத்தக்கது. மேற்படி சிறப்பான பந்துவீச்சுக்களால் 28-வது இடத்திலிருந்து அவர் 19-வது இடத்திற்கு முன்னேறினார். இதேபோன்று பெட்ரோ காலின்ஸ் 175 ஓட்டங்களை எடுத்து 7விக்கெட்டை சாய்த்தார். இதன்மூலம் அவர் 23-வது இடத்திலிருந்து 15-வது இடத்திற்கு முன்னேறினார்.

## *I.C.C CHAMPION TOURNAMENT*

மினி உலகக்கோப்பை என்று அழைக்கப்படும் 12 நாடுகள் ஐ.சி.சி சாம்பியன் கிரிக்கெட் போட்டிகள் இங்கிலாந்தில் செப்ரெம்பர் 10ஆம் திகதி ஆரம்பமாகியுள்ளது. ஐ.சி.சி சாம்பியன் கிரிக்கெட் போட்டி இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்படுகிறது. 1998 ஆம் ஆண்டு டாக்காவில் நடந்த முதல் போட்டியில் தென்னாபிரிக்கா பட்டம் வென்றது.

2000ஆம் ஆண்டு நைரோபியில் நடந்த 2-வது போட்டியில் நியூசிலாந்து கோப்பையைக் கைப்பற்றியது. 2002 ஆம் ஆண்டு கொழும் பில் நடந்த போட்டியில் இந்தியாவும் இலங்கையும் இணைந்து கோப்பையை கைப்பற்றியது. இந்த ஆண்டு 4-வது ஐ.சி.சி சாம்பியன் கிரிக்கெட் போட்டி இங்கிலாந்தில் (10ஆம் திகதி) ஆரம்பமாகியுள்ளது. 25-ஆம் திகதி வரை போட்டி நடக்கிறது. இதில் 12 நாடுகள் பங்கேற்கின்றன. அவை நான்கு பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது. 'ஏ' பிரிவில் அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, அமெரிக்கா, அணிகளும், 'பி' பிரிவில் தென்னாபிரிக்கா, மேற்கு இந்திய அணி, வங்காளதேசம்

**எஸ். கணேஷ்**

அணிகளும், 'சி' பிரிவில் இந்தியா, பாகிஸ் தான், கென்யாவும், 'டி' பிரிவில் இலங்கை, இங்கிலாந்து, சிம்பாப்வே அணிகளுடம் இடம் பெற்றுள்ளன.

ஒவ்வொரு பிரிவிலும் ஓர் அணி மற்ற இரண்டு அணிகளுடன் தலா ஒரு முறை மோதும். இதில் முதல் இடத்தை பிடிக்கும் அணி அரையிறுதிக்கு தகுதி பெறும். இந்திய அணி தனது முதல் ஆட்டத்தில் கென்யாவை 11 ஆம் திகதியும், 2-வது ஆட்டத்தில் 19 ஆம் திகதி பாகிஸ்தானையும் எதிர்கொள்கிறது.

இந்திய அணியில் நட்சத்திர ஆட்டக்காரர் டெண்டுல்கர் காயம் காரணமாக ஆட வில்லை. அவருக்குப் பதிலாக ரோகன் கவாஸ்கர் சேர்க்கப்பட்டுள்ளார். சிறிலங்கா வின் முரளிதரனும் காயம் காரணமாக ஆடவில்லை. முதல் நாள் 'டி' பிரிவில் இடம்பெற்றுள்ள இங்கிலாந்தும் சிம்பாவேயும் மோதுகிறது. கடந்த உலக கோப்பை சில ஆட்டங்கள் சிம்பாப்வேயில் வைத்து நடைபெற்றது. பாதுகாப்பு காரணங்களை கருதி நாசர் உசேன் தலைமையிலான இங்கிலாந்து அணி சிம்பாப்வே சென்று விளையாட மறுத்துவிட்டது. அதற்கு பிறகு இருநாடுகளும் முதல் முறையாக இன்று மோதுகின்றன. 'ஏ' பிரிவில் நடைபெறும் ஆட்டத்தில் நியூசிலாந்து



- அமெரிக்கா மோதுகிறது. இதில் பலம் வாய்ந்த நியூசிலாந்து அணியும், இங்கிலாந்தும் எளிதில் வெற்றி பெற்றுவிடும் என நம்மப்படுகிறது.


## ஐ.சி.சி கிரிக்கெட் போட்டி அட்டவணை

ஐ.சி.சி சாம்பியன் கிரிக்கெட் போட்டி இங்கிலாந்தில் நடைபெறுகிறது. இந்தப் போட்டி 25ஆம் திகதி வரை நடபெறுகிறது.

| திகதி | மோதும் அணிகள் | இடம் |
|---|---|---|
| செப்-10 | இங்கிலாந்து-சிம்பாப்வே | எட்பஸ்டன் |
| செப்-10 | நியூசிலாந்து-அமெரிக்கா | ஓவல் |
| செப்-11 | இந்தியா-கென்யா | ரோஸ்பவுல் |
| செப்-12 | தென்னாபிரிக்கா-வங்காளதேசம் | எட்பஸ்டன் |
| செப்-13 | அவுஸ்திரேலியா-அமெரிக்கா | ரோஸ்பவுல் |
| செப்-14 | பாகிஸ்தான்-கென்யா | எட்பஸ்டன் |
| செப்-14 | இலங்கை-சிம்பாவே | ஓவல் |
| செப்-15 | வெஸ்ட்இண்டீஸ்-வங்காளதேசம் | ரோஸ்பவுல் |
| செப்-16 | அவுஸ்திரேலியா-நியூசிலாந்து | ஓவல் |
| செப்-17 | இலங்கை-இங்கிலாந்து | ரோஸ்பவுல் |
| செப்-18 | தென்னாபிரிக்கா-வெஸ்ட்இண்டீஸ் | ஓவல் |
| செப்-19 | இந்தியா-பாகிஸ்தான் | ஓவல் |
| செப்-21 | அரையிறுதி | எட்பஸ்டன் |
| செப்-22 | அரையிறுதி | ரோஸ்பவுல் |
| செப்-25 | இறுதிப்போட்டி | ஓவல் |

*20, 23, 24 ஆகிய திகதிகளில் போட்டிகள் நடைபெறாது.*

# கனடிய வட்டிவீதம் மேல்நோக்கி நகர்கின்றது





கடந்த ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலத்தில் முதல் தடவையாக, கனடிய மத்திய வங்கி, வட்டிவீதத்தை 1/4% ஆக அதிகரித்துள்ளது. ஏற்கனவே 2%ஆக இருந்த மத்தியவங்கியின் வட்டிவீதம் 2.25% ஆக கடந்த செவ்வாய்கிழமை செப்ரெம்பர் 07, 2004 இலிருந்து அதிகரித்துள்ளது. இந்த அதிகரிப்பினால் முதன்மை வட்டிவீதமும் 1/4% ஆல் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. சகல நிதி நிறுவனங்களும் முதன்மை வட்டிவீதத்தை 3.75% இலிருந்து 4% ஆக அதிகரித்துள்ளன. மற்றும் 5 வருடத்திற்குரிய வட்டிவீதமும் அதிகரித்துள்ளது. இவ்வருடத்தில் மத்தியவங்கியின் பொறுப்பாளர்கள், மேலும் இருதடவைகள் சந்திக்க இருப்பதால் வட்டிவீதத்தில் மேலதிக அதிகரிப்பு ஏற்படலாம் என எதிர்பார்க்கப் படுகின்றது. கனடிய பொருளாதாரத்தில் நல்ல ஆரோக்கிய மான வளர்ச்சி (Growth) இருப்பதால் பணவீக்கம் (Inflation) ஏற்படலாம் என்பதனால் வட்டிவீதம் அதிகரிக்கப்படுகின்றது.

பொதுவாக முதன்மை வட்டிவீதம் அதிகரிக்கும் போது Variable Mortgage இல் வைத்திருப்பவர்களிற்கும், Line of Credit வைத்திருப்பவர்களிற்கும் நேரடி மாதாந்த அதிகரிப்பைக் காணக்கூடியதாக இருக்கும். வட்டிவீத அதிகரிப்பால், கனடிய டொலரின் பெறுமதியில் அதிகரிப்பு ஏற்படுகின்றது. இது கனடிய ஏற்றுமதிப் பொருளாதாரத் திற்கு உகந்ததல்ல.

மத்தியவங்கி ஆளுனர் டேவிட் டொட்ஜ் இற்கு இது மற்றைய பிரச்சினையாகக் காணப்படுகின்றது. வட்டிவீதத்தை அதிகரிக்க கனடிய டொலரின் பெறுமதி அதிகரிக்க கூடிய சந்தர்ப்பம் ஏற்படும். இருந்தும் பணவீக்கத்தை கட்டுப்படுத்த வேண்டியதற்காக வட்டி வீதத்தில் மேலதிக அதிகரிப்பு ஏற்படலாம் என தெரிகின்றது. இந்த வட்டிவீத அதிகரிப்பு 2005 ஆம் ஆண்டிலும் தொடரும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

## வீடு விற்பதாக இருந்தால் விரைவாகவும், கூடிய விலையிலும் விற்பதற்கு கவனிக்க வேண்டிய முக்கிய விடயங்கள்

- வீட்டிற்குள் புகும் கதவு (Main Door) துப்பரவாகவும், அழுக்குகள் இல்லாமல் இருப்பது நல்லது.
- வீடாக இருந்தால், வீட்டின் முன்பக்கத்திலும், பின்பக்கத்திலுமுள்ள கழிவுப் பொருட்களை, பாவிக்காத பொருட்களை, இலைகளை துப்பரவு செய்து கொள்ளுங்கள். (Winter காலங்களில் பனியை (Snow)யும் வீடுவாங்குபவர்கள் நடந்து வரக்கூடியதாக துப்பரவு செய்துவிடவும்.
- குசினியின் பகுதிகளையும், குளியலறையின் பகுதிகளையும் துப்பரவு செய்து நல்மணம் கொடுக்கும் வாசனைப் பொருட்களை வைத்துவிடவும்.
- உடைந்து / நெழிந்து இருக்கும் பலகைகளை மாற்றி விடவும்.
- ஜன்னலில் போட்டு இருக்கும் சேலைகளை திறந்து விடவும். இதனால் வெளிச்சம் உள்ளே வர வீட்டை பிரகாசமாக காட்டும்.
- தண்ணீர் வடிந்து கொண்டு இருக்கும் பகுதிகளை மாற்றி விடவும்.
- படி ஏறும் பகுதிகளில் உள்ள பொருட்களை நீக்கி விடவும்.
- வீட்டில் உபயோகிக்காத பொருட்களை வெளியே எடுக்கவும் அல்லது Garageஇல் ஒழுங்காக அடுக்கி வைக்கவும்.
- எல்லா மின்குமிழ்களையும் (Bulbs) எரியவிடவும்.
- வீடு பார்க்க வருபவர்களிடம் தேவையில்லாமல் கதைப்பதை தவிர்த்தல் சிறந்தது.
- வீடு பார்ப்பவர்கள் வீடு சம்பந்தப்பட்ட கேள்விகள் கேட்கும் போது குறைந்தளவு பதில் கொடுப்பது நல்லது அல்லது வீட்டு வியாபார பிரதிநிதியுடன் (Sales Rep.) கதைக்கச் சொல்வது சரியானது.










நாமும்
நமது
இல்லமும்
ராஜா மகேந்திரன்



**Finch/Middlefield**

**$329,900**
Detached
3 Bedrooms
3 Washrooms
renovated

**Neilson/Sheppard**

**$229,900**
Semi Detached
4 Bedrooms
Sep. Entrance
3 Washrooms


**Morningside/Finch**

**$337,900**
Detached
4+2 Bedrooms
Sep. Entrance
2 Kitchens

**Markham/Denision**

LEASE TO OWN
**$1300.00**
Detached
3 Bedrooms
3 washroom
3 Yrs Old

**Kennedy/Sheppard**

**$178,000**
Condo Apt.
3+1 Bedrooms
2 Washrooms

**Markham/Sheppard**

**$292,900**
4+1 Bedrooms
3 Washrooms
2 Kitchen
4 Level Split

**Warden/Finch**


**$128,900**
Condo Apt.
1 Bedrooms
1 Washrooms
Parking


**Sheppard/Allen**

**$189,900**
Condo Apt.
2 Bedrooms
2 Washrooms
5 Yrs Old

**Neilson/Sheppard**


**$178,000**
Townhouse
3 Bedrooms
2 Washrooms
1 Kitchen


**McCowan/Sheppard**

**$119,900**
Condo Apt.
2+1Bedrooms
2 Washrooms
Clean Unit


**Neilson/McLevin**

**$159,000**
Condo Apt.
2 Bedrooms
2 Washrooms
1 Kitchen

**Pharmacy/Lawrence**

Sold
**$339,900**
Detached
3+2+1 Bedrooms
Sep. Entrance
2 Kitchen

New Listing
**Neilson/McNicoll**

**$249,000**
Detached
3+1 Bedrooms
3 Washrooms
Sep. Entrance

New Listing
**Finch/Mccowan**

**$359,900**
Detached
4+2 Bedrooms
4 Washrooms
sep. entrance
2 Kitchen

New Listing
**Birchmount/Lawrence**

**$299,900**
Detached Bungalow
3+2 Bedrooms
2 Full Washrooms
2 Kitchen

**Morningside/Sheppard**
Brand New **TOWNHOUSE**
Build by **Mattamy** For Sale
**$259,900**

HOMELIFE HIGHER STANDARDS

ராஜா மகேந்திரன்
Broker/Owner
Cell: 416-315-9397
Off : 416-321-6969



HOMELIFE/GTA Realty Inc. 1711McCowan Rd. Suite 206, Toronto, ON M1S-3Y3

# Neelam Silk

சுபமுகூர்த்தப் பட்டுக்கு என்றுமே இராசியான இடம்

'தமிழர் மத்தியில் தரமான பட்டுப் புடவை மாளிகை'

# நீலம் சில்க்



- SONALIKA PURE SILK
- JARDHOSHI SATIN & CREPE SILK
- JAPAN CRYSTAL SILK
- JAIPUR CRYSTAL SILK
- VASUNTHARA NETWORK CREPE

பட்டுத் தெரிவுகள் அனைத்துக்கும்

## "நீலம் சில்க்"

T.P: 416-778-7455
Fax: 416-778-8484
1453 GERRARD STREET, EAST
(INDIAN BAZZAR)

T.P: 416-759-2002
2378 EGLINTON AVE., E.
(Kennedy Rd. & Eglinton Ave, Scar.)

# LARGE INDOOR PUBLIC CAR AUCTION

**EVERY WEDNESDAYS EVENING**
**STARTING AT 7:00 PM - VIEWING FROM 9:00 AM**

## 100+ VEHICLES ON DISPLAY INDOORS

INCLUDE MANY LATE MODEL
- G.M.
- FORD
- CHRYSLER
- HONDA
- NISSAN
- TOYOTA
- V.W., & OTHER FOREIGN & DOMESTIC VEHICLES



BANK REPOSSESSIONS, BAILIFF SEIZURES, BANKRUPTCIES, OFF LEASE VEHICLES, CONSIGNMENTS ETC.




WEEKLY CASH BUYERS DRAWS OPEN
MONDAY - FRIDAY 9:00 AM TO 6:00PM

FOR VIEWING: SATURDAY 10:00 AM TO 4:00 PM


CIA PUBLIC AUTO AUCTION & SALES
416 - 242 - 5052
**www.cialeasing.com**

**1032 MARTIN GROVE ROAD, ETOBICOKE, ON**

16 வருடங்களாக தமிழர் மத்தியில் நன்மதிப்பைப் பெற்ற

# யோகாஸ்

## குறுக்கு எழுத்துப் போட்டி இல. 155



**இட - வல**

1. தமிழீழத்தில் ஒரு நகரம்
4. ஒழுங்கு(வல-இட)
5. நண்பன்
7. சாதாரணம்
8. குளம்
9. பத்திரம்
11. விரி (வல-இட)
12. உத்தேசம்
14. வாகனம் (வல-இட)

**மேல் - கீழ்**

1. ஒருவகை சிப்பி
2. கணப்பொழுது
3. சிறிய பெட்டி
4. மரக்கறி ஒன்று
6. இடம் ( கீழ்-மேல்)
10. விடுகதை
12. ஐரோப்பிய நாணயம் (கீழ்-மேல்)
13. சாமி (கீழ்-மேல்)

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ம | ட் | ட | க் | க | ள | ப் | பு |
| டை | | ந | | ட | வி | | டை |
| ப் | | | ரி | க | | து | வை |
| ப | க் | கு | வ | ம் | | டை | |
| ள் | | ண | | | ∴ | | ம் |
| ளி | | ம் | ப | சு | | | ன |
| | ப | | | க | | தி | வ |
| ம | ண் | டூ | க | ம் | | கு | பு |

சரியான விடைகளில் இருவர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படுவர். இவர்களுக்கு "யோகாஸ்" இல் பாவிக்கக் கூடிய $15, $10 Gift Certificates வழங்கப்படும். இதற்கு cash value கிடையாது. விடைகள் September 28, 2004க்கு முன்னர் விளம்பரம் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**154இல் வெற்றி பெற்றோர்**
1) T. Suthakaran , Toronto
2) M. Chinniah, Scarborough

- ஆட்டிறைச்சி வியாபாரத்தில் தமிழ் மக்களின் உள்ளங்களை வென்றவர்!
- அன்றாட சந்தையில் மரக்கறி, மீன் வகைகளை தினமும் தருவித்துக் கொடுப்பவர்கள்.
- வாடிக்கையாளர்களின் தொகையில் உயர்ந்தவர்!

**(416) 267-0408** 731 - 733 Kennedy Road [Ken-Mark Plaza]

# mhc MOHAN HOMEOPATHIC CLINIC & MASSAGE CLINIC

- கழுத்து, முதுகு நோவு
- வாகன விபத்து
- மன அழுத்தம்
- விளையாட்டுக் காயங்கள்
- தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் **டாக்டர் ஜே. மோகன்**



Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION
REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

- STRESS
- SKIN PROBLEM
- RESPIRATORY PROBLEMS
- DIGESTIVE PROBLEMS
- VARICOSE VEINS
- BACK PROBLEM /NECK PROBLEM
- TENNIS ELBOW PROBLEM
- TREAT WITH MASSAGE THERAP
- ALLERGIES
- SEXUAL PROBLEMS
- SEXUAL PROBLEMS
- CHOLESTEROL
- TUMOR
- FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER


**TEL: 416-298-7537/416-291-3022**

5200 Finch Ave, East Suite 210
(At Middle Field), Scarborough, M1S 4Z4

# ஒரு சிகரெட் புகை

## Diabetes III

இதயத் துடிப்பை வேகப்படுத்தும்.
இரத்த அழுத்தத்தை அதிகரிக்கும்.
இரத்த ஓட்டத்தைக் குழப்பும்.



நீரிழிவு நோய்பற்றிய வரலாறு பண்டைக்காலக் கிரேக்கத்தில் இருந்து ஆரம்பிக்கின்றது. "Siphon", என்ற கிரேக்க சொல்லில் இருந்தே "Diabetic", என்ற சொல்லும் வந்துள்ளது. கிரேக்கர்கள் இந்நோயை "Mellitus", என்று குறிப்பிட்டுள்ளனர். இதனுடைய அர்த்தம் தேன், அல்லது இனிப்பு என்ற பொருள்படும்.

இந்நோய் குறித்து, பழங்கால எகிப்தியர்களும் எழுதிவைத்துள்ளார்கள். கிமு 150 களில் Papyrus என்கின்ற நீரில் வாழும் தாவரத்தைப் பயன்படுத்தி எழுதப்பட்ட சுவடியில் 'அடிக்கடி சிறுநீர்கழித்தல்' என்று இந்நோய் குறிப்பிடப் பட்டுள்ளது. ஆனால் அதற்கு அவர்கள் செய்த மருத்துவம் பற்றிய குறிப்புகள் எதுவும் கிடைக்கவில்லை.

தோமஸ் வில்லியம் (இலண்டன்) 1679ல், இந்நோய் உள்ளவர்களின் சிறுநீர் 'சுவையான இனிப்பு' என்று குறிப்பிட்டுள்ளார். நூறு வருடங்களின் பின் Matthew Dobson என்ற மருத்துவர், குளுக்கோஸ் உடலினலால் பயன்படுத்தப்பட முடியாமல் சிறுநீருடன் வெளியேறுகின்றது என்ற அவதானத்தை வெளிப்படுத்தினார்.

**DNA Techniques ஐ பாவித்து, மனிதர்களில் இருக்கின்ற அதே புரதவகையைக் கொண்ட இசுலினை, பற்றீரியாக்களைக் கொண்டு சுரப்பிப்பதற்கு கண்டுபிடிக்கப்பட்டது. இன்று பற்றீரியாக்கள் லீற்றர் கணக்கில் இன்சுலினை சுரக்கின்றன.**

சதையத்தில் (Pancreas) உள்ள சில கலங்கள் செயல்பட முடியாத நிலைமை ஏற்படுகின்ற போது இந்தநோய் ஏற்படுகின்றது என்று 1889ல் Paul Langerhans கண்டுபிடித்தார்.

ஒரு நாயினுடைய சதையத்தை சத்திர சிகிச்சை மூலம் அகற்றியபோது அந்த நாய்க்கு சிறுநீரக வருத்தம் ஏற்பட்டது. இதில் இருந்து சதையத்தின் தொழில்பாட்டு பிரச்சினையே இந்த சிறுநீரக வருத்தத்திற்கு காரணம் என்று கண்டறியப்பட்டது.

பின்னர் சதையத்தினால் சுரக்கப்படும் ஓர் ஓமோனே இந்த பிரச்சினைக்குக் காரணம் என்று அறியப்பட்டது. 1921ல் இந்த இன்சுலின் என்கின்ற ஓமோன் கண்டுபிடிக்கப்பட்டது. உடலில் உள்ள ஓமோன்களிலேயே முதன் முதலாக கண்டுபிடிக்கப்பட்ட ஓமோன் இன்சுலினே ஆகும்.

1921ல் ரொறன்ரோ பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த Frederic Grant Banting மற்றும் Charleh Herbert என்பவர்களால் முதன் முதலாக இன்சுலின் கண்டுபிடிக்கப்பட்டது. இதற்காக இவர்களுக்கு (1923) நோபல் பரிசு வழங்கப்பட்டது.

நீரிழிவு நோயாளர்களுக்கு மாடு, பன்றிகளில் இருந்து எடுக்கப்பட்ட இன்சுலின், போத்தல்களில் அடைக்கப்பட்டு விற்பனைக்கு வந்தது. இது பயனளித்தாலும் மனிதரிடம் இயற்கையாக இல்லாத சில புரதங்கள் (Foreign protein) இந்த இன்சுலினில் இருந்த படியால் பலருக்கு அலேர்ஜியை (Allergy) உண்டு பண்ணியது.


1980ல், படிப்படியாக வளர்ந்து வந்த DNA Techniquesஐ பாவித்து, மனிதர்களில் இருக்கின்ற அதே புரதவகையைக் கொண்ட இன்சுலினை, பற்றீரியாக்களைக் கொண்டு சுரப்பிப்பதற்கு கண்டுபிடிக்கப்பட்டது. இன்று பற்றீரியாக்கள் லீற்றர் கணக்கில் இன்சுலினை சுரக்கின்றன.

**செழியன்**

நீரிழிவு நோய் பிரதானமாக இரண்டு வகைப்படுகின்றது. முதலாவது வகை நீரிழிவு நோய் (Type 1 diabetes), இரண்டாவது வரை நீரிழிவு நோய் (Type II diabetes) என்று இவை அழைக்கப்படுகின்றன.

சதையத்தினால், இன்சுலினை முற்றிலுமே சுரக்க முடியாத நிலைமை இருக்குமாயின் அது முதலாவது வகை நீரிழிவு நோய் எனப்படுகின்றது. நீரிழிவு நோய் உள்ளவர்களில் பத்து சதவீமானவர்களுக்கே இவ்வகையான நீரிழிவு நோய் இருக்கின்றது.

சதையத்தில் இருக்கின்ற Beta கலங்களே இன்சுலின் சுரக்கின்ற வேலையைச் செய்கின்றன. சில சமயம் காரண காரியம்




எதுவும் இல்லாமல் Beta கலங்கள் தமது பணியை நிறுத்தி விடுகின்றன.
நமது உடல் வைரஸ், பற்றீரியாக்கள் என்று பலவகை எதிரிகளினாலும் தாக்கப்படாமல் பாதுகாக்கப்படுவதற்கு நமது விசேட பாதுகாப்பு அதிகாரிகளே காரணமாகும். நாம் நித்திரையாக இருக்கும் போதும் சரி, எந்த வித கவலையே இல்லாமல் பேசிக்கொண்டிருக்கும் போதும் சரி, இவர்கள் தமது பாதுகாப்பு பணியில் மிக அவதானமாக இருக்கின்றார்கள். இந்த பாதுகாப்பு அதிகாரிகள் சில சமயங்களில் உணர்ச்சிவசப்பட்டு தவறான தாக்குதல்களில் இறங்கி விடுகின்றார்கள். சதையத்தில் இருக்கின்ற இன்சுலின் சுரக்கும் Beta கலங்களை இப் பாதுகாப்பு அதிகாரிகள் தாக்குவதாலேயே இக்கலங்கள் தமது தொழிற்பாட்டை இழக்கின்றன. அதிகாரிகளின் இந்த தவறான தாக்குதலுக்கு காரணம் கண்டுபிடிக்கப்படவில்லை.

இந்த வகை நோயாளிகளுக்கு, இன்சுலின் ஊசி மூலம் ஏற்ற வேண்டும். இன்சுலினை வாய் மூலம் உள்ளெடுக்க முடியாது. இன்சுலின் புரதத்தினால் ஆனது. வாய் மூலம் உள்ளெடுக்கப்படும் போது அது சமிபாட்டுத் தொகுதியில் சமிபாடு அடைந்து பயன் இல்லாது போய்விடும்.

தேவையான அளவுக்கும் குறைவான அளவில் இன்சுலின் சுரக்கப்படுகின்ற நிலைமை அல்லது சுரக்கப்படும் இன்சுலினை உடலினால் பாவிக்க முடியாத நிலைமை உருவாகினால் அது இரண்டாம் வகை நீரிழிவு என்று அழைக்கப்படுகின்றது. நீரிழிவு நோய் உள்ளவர்களில் தொண்ணூறு சதவீதமானவர்கள் இந்த இரண்டாம் வகையைச் சார்ந்தவர்களே.

பரம்பரை அலகு (Genetic), பருத்த உடல் (Obesity), அதிக கொழுப்பு உணவுகளையும், குறைவான நார்ச் சத்து உணவுகளையும் உட்கொள்ளுதல், உடல் பயிற்சி இன்மை என்பன இந்த இரண்டாம் வகை நீரிழிவு நோய் வருவதற்கு காரணமாக இருக்கலாம் என பெரிதும் நம்பப்படுகின்றது.

எந்தவகை நீரிழிவு நோயாய் இருந்தால் என்ன? இவை குறிவைத்து தாக்கும் இடங்களில் ஒன்று நமது பாதங்களாகும். இந்த தாக்குதல்களில் இருந்து நமது பாதங்களை பாதுகாக்க சிறப்புக் கவனம் செலுத்த வேண்டும்.

தினமும் பாதங்களை இளம் சூட்டு நீரினால் நன்கு கழுவவேண்டும். பின்பு ஈரம் இல்லாமல் பாதங்களை மெல்லத் துடைக்க வேண்டும். கடும் குளிரான அல்லது கடும் சூடான நீரினால் பாதங்களைக் கழுவக் கூடாது. முக்கியமாக விரல்களின் இடைவெளிகளை துப்பராக வைத்திருக்க வேண்டும். இந்த இடங்கள் துப்பரவு இல்லாமல் இருக்கின்ற போது கிருமிகள் இந்த இடத்தில் குடிபுகுந்துவிடுகின்றன.


கிருமிகள் நகங்களுக்குள் குடிபுகுந்து விடாமல் இருப்பதற்காக, நகங்களை வளர விடாது அடிக்கடி வெட்டி விடவேண்டும். நகங்களை வெட்டும் போது கவனமாக இருக்கவேண்டும். கவனமில்லாது நகங்களை வெட்டி, நகங்கள் கிழிந்து போனால் அதிலிருந்தே பாதங்களுக்கு பிரச்சினை ஆரம்பித்து விடலாம்.

தினமும் அடிப்பாதங்களை பரிசோதனை செய்வது மிக அவசியமானது. ஏதாவது காயங்கள், புண்கள் அல்லது ஏதாவது தடிப்புகள் உள்ளதா என்பதைக் கண்டறிவது இந்த பரிசோதனையின் நோக்கமாகும். இப்படி பரிசோதிக்கும் போது, பாதங்களின் தோல் நிறத்தில் ஏதாவது மாற்றங்கள் இருக்கின்றதா என்பதையும் உன்னிப்பாக கவனிக்க வேண்டும். அது மட்டுமல்லாது அடிப்பாதங்களில் உணர்ச்சி உள்ளதா? எந்தளவுக்கு உணர்ச்சி உள்ளது என்பதையும் பரிசோதனை செய்து வரவேண்டும். ஏதாவது சந்தேகப்படும் படியான நிலைமை காணப்பட்டால் உடனடியாக மருத்துவரிடம் செல்லவும்.

நீரிழிவு நோயாளர்கள் கால்களுக்கு தவறாது பாதணிகள் அணியவேண்டும். அதே நேரம் அணிகின்ற பாதணிகள் தொடர்பாக அதிக அக்கறையும் இவர்களுக்குத் தேவை. இறுக்கமான காலணிகளினால் பாதங்களுக்கு சேதம் ஏற்படும். எனவே கால்களுக்கு சேதம் ஏற்படுத்தாத, பாதுகாப்பான, மென்மையான, இறுக்கமற்ற, விரல்களை அசைக்கக் கூடிய பாதணிகளையே அணியவேண்டும். பாதணிகளை அணியமுன்னர் தினமும் அவற்றை பரிசோதித்துப் பார்க்க வேண்டும். இந்தப் பாதணிகளுக்குள் சிறு கற்கள், ஆணிகள் என்பன இருந்து பாதங்களை பதம் பார்த்த அனுபவங்களும் ஏராளமாக உள்ளது. இதனால் பாதங்கள் சேதமடைந்துள்ளன.
புகைபிடிப்பது இரத்த ஓட்டத்தை பெரிய அளவில் பாதிக்கும். அவ்வாறு இரத்த ஓட்டம்

**இன்சுலினை கண்டுபிடித்த ரொறன்ரோ பல்கலைக்கழகத்தில் இருந்து இன்னுமோர் புதிய கண்டுபிடிப்பு வெளியிடப்பட்டுள்ளது. இது நீரிழிவு வருத்தத்தின் சரித்திரத்திலேயே அதிமுக்கியத்துவம் வாய்ந்த கண்டுபிடிப்பாகும்.**

பாதிப்படைந்தால் அது பாதங்களுக்கு செல்லும் இரத்த ஓட்டத்தை பாதித்து உணர்ச்சி நரம்புகளையும் பாதிக்கும் எனவே பாதங்களைப் பாதுகாக்க, உடனடியான இந்த புகைத்தல் பழக்கத்தை விட்டொழிப்து நல்லது. புகைப்பிடித்தல் உடல் ஆரோக்கியத்துக்கு கெடுதலே செய்யும் என்று அறிந்திருந்தாலும் சலரோக நோயாளருக்கு இது பெரும் கேடு விளைவித்து நோயினால் ஏற்படுகின்ற பாதிப்புகளை விரைவுபடுத்தி விடுகிறது. ஒருவர் ஒரு சிகரெட்டைப் புகைத்தாலே போதும் அது அவரது இதயத்துடிப்பை வேகப்படுத்தும், இரத்த அழுத்தத்தை அதிகரிக்கும், இரத்த ஓட்டத்தைக் குழப்பும். தொடர்ச்சியான இத்தகைய செயற்பாட்டின் காரணமாக குருதிக் குழாய்கள் சேதம் அடைகின்றன. இது மாரடைப்பு மற்றும் பாரிசவாத நிலைமைக்கு வெகு சீக்கிரமே இட்டுச் சென்று விடும். இத்தோடு புகைத்தல் சுவாசப்பையில் இருக்கின்ற நுண்ணிய கலங்களான 'சிலியா' (cilia) வை சேதப்படுத்துகின்றன. ஓர் வருடம் தொடர்ச்சியாக புகைப்பிடிப்பவர்களுக்கு, சேதமடைகின்ற 'சிலியா' கலங்கள் முற்றாக செயல் இழக்கின்றன.



இந்த சமயத்தில் ஆச்சரியமானதும் மகிழ்ச்சியானதுமான ஒரு தகவல் வெளியாகியுள்ளதை குறிப்பிட்டாக வேண்டும். இன்சுலினை கண்டுபிடித்த ரொறன்டோ பல்கலைக்கழகத்தில் இருந்து இன்னுமோர் புதிய கண்டுபிடிப்பு வெளியிடப்பட்டுள்ளது. இது நீரிழிவு வருத்தத்தின் சரித்திரத்திலேயே அதிமுக்கியத்துவம் வாய்ந்த கண்டுபிடிப்பாகும்.

சதையத்தில் (Pancreas) ல் இன்சுலின் சுரப்பதற்கு காரணமான Beta கலங்கள் பழுதடைந்தாலும், இந்த Beta கலங்களை மறுபடியும் சதையத்தில் உற்பத்தி செய்யக் கூடிய Stem cell ஐ தாம் கண்டுபிடித்து விட்டதாக Simon Smukler Ph.D Candidate in U of T,s Department of Medical Genetics and Microbioligy கூறியுள்ளார். இவர் இந்த மருத்துவ ஆராய்ச்சியின் முன்னணி ஆராய்ச்சியாளர்களில் ஒருவராவார்.

Stem cell என்றால் என்ன? இதனைப் பாவித்து நீரிழிவு நோயாளிகளுக்கு மறுபடியும் இன்சுலினை சுரக்கச் செய்யும் அதிசயத்தை நிகழ்த்த முடியுமா? அதை எவ்வாறு செய்வது? இது பற்றி விபரமாக பின்னர் பார்க்கலாம். அதற்கு முன்னர் நீரிழிவு நோயாளிகள் மது அருந்தலாமா? என்பது பற்றி அடுத்த இதழில் பார்க்கலாமா?



Niru
BRAND®
'நிரு' தயாரிப்புக்கள்'
கனடிய சுகாதார விதிகளுக்கமைய
கனடாவில் தயாரிக்கப்படுகின்றன
No.1
முதல் தரமான
மிளகாய், மல்லி
ஏனைய
சரக்கு வகைகள்
கொண்டு
தயாரிக்கப்படுவதனால்
தரம்
No. 1
ROASTED
CURRY (CHILLI) POWDER
POUDRE DE CURRY (ROTIES)
JAFFNA
Hot Curry Powder
POUDRE DE CURRY JAFFNA (PIQUANT)
Free Spoon Inside
Manufacturers & Distributors of
Niru Brand® Products
NIRU ENTERPRISES INC.
76 Howden Road, Scarborough, Ont. M1R 3E4 Canada
Tel: 416-750-1976 Fax: 416-750-8779
E-mail: niru@total.net Web: www.niru.com
Distributors in Europe
UK. Marketing Office: NIRU ( Europe) LTD.
Unit 11, Mitcham Industrial Estate, 85, Streatham Road,
Mitcham, Surrey, CR4 2AP,
U.K. Tel.: 44 + 208 640 8228
Fax: 44 + 208 640 8312

# விபத்தை ஏற்படுத்தி விட்டு தப்பியோடும் வாகனங்கள்

மேலதிகமாக ஒப்பந்தத்தில் விசேடமாக குறிப்பிட்டிருந்தாலொழிய $400 தொகையே ஆக கூடுதலான கிழமை வருமான இழப்பீட்டு நிவாரணமாக வழங்கப்படும். முதல் 104 கிழமைக்கு இவ் வருமான இழப்பீட்டு நிவாரணத்தினை பெற்று வருபவர் தொடர்ந்தும் தமது தொழிலைத் தொடர முடியாத நிலைமைக்கு உடல் பாதிப்புகள் இருக்குமானால் மேலதிகமாக வாரம் ஒன்றுக்கு $185 அதிகமாக வழங்கப்படும். ஆனால் 65 வயது வரும் போது இந்தக் கொடுப்பனவு குறைக்கப்படும்.

இந்த நிவாரண நிதியைப் பெற சில நிபந்தனைகள் உள்ளன.

- விபத்தில் காயமடைந்தவர் தொழில் செய்து கொண்டிருப்பவராகவும், இவ் விபத்தின் காரணமாக கணிசமான அளவு தமது தொழிலை செய்ய முடியாத அளவுக்கு உடல் நிலையில் பாதிப்பு ஏற்பட்டவராகவும் இருக்க வேண்டும்.

**விபத்தில் காயமடைந்தவர் உடன்டியாக மரணமாகினால் அல்லது குறிப்பிட்ட காலத்தின் பின்பு மரணமாகினாலும் அவருடைய மனைவிக்கு அல்லது கணவருக்கு $25,000 வழங்குவதுடன் அவரில் தங்கி வாழும் ஒவ்வோர் பிள்ளைக்கும் குறைந்தது $10,000 வழங்கப்படும்.**

- வயது 16 க்கு குறையாதவராக இருக்க வேண்டும்.

-விபத்தில் காயப்பட்டவர் காயப்பட்ட நேரம் தொழில் இல்லாதவராக இருந்திருந்தால் விபத்து நடந்த காலத்திற்கு 52 கிழமைக்கு முன்னர் கடைசி 26 கிழமைகளாவது வேலை செய்திருக்க வேண்டும். அல்லது வேலையில்லாத காப்புறுதி திட்டத்தில் வருமானம் பெற்றுக் கொண்டிருந்தவராக இருக்க வேண்டும்.

-வேலை இல்லாத நிலைமையில், வேலை ஒன்றில் சேர்வதற்காக காத்திருப்பவராக இருந்தால் விபத்து நடந்து ஒரு வருட காலத்தினுள் சட்ட ரீதியாக, குறிப்பிட்ட சம்பளத்தில் வேலை ஒன்றில் சேர உள்ளார் என்பதினை தொழில் வழங்குபவரிடம் இருந்து எழுத்தில் பெற்று காப்புறுதிக் கம்பனிக்கு வழங்க வேண்டும்.

**சிவ. பஞ்சலிங்கம்,B.Com.**

வருமானமில்லாதோர் நட்ட ஈட்டு நிவாரணம் (Non- Earner Benefit)

விபத்தின் காரணமாக சாதாரண வாழ்வினை முற்றாகத் தொடர முடியாத நிலைமையில் இருப்பவர்கள் பின்வரும் மூன்று நிலைமையில் ஏதாவது ஒன்றில் உள்ளவராக இருந்தால் இந் நிவாரணத்தினை பெற தகுதியுடையவர்கள் ஆகின்றார்கள்.

-முன்னர் குறிப்பிட்ட 'வருமான இழப்பீட்டு நிவாரணத்தை' பெற்றுக் கொள்ள தகுதி இல்லாதவர்.

-'பராமரிப்பவர் சலுகை' (Caregiver Benefit) தேவையில்லை என்று நிறுத்தப்பட்டவர்.

-விபத்தின் போது முழுநேர மாணவராக அல்லது ஒரு வருடத்திற்கு குறையாது படிப்பை முடித்து வேலையில் சேராமல் இருப்பவர்.

இந்த நிவாரணம் விபத்து நிகழ்ந்து முதல் 26 கிழமைகளுக்கு பின்பே வழங்கப்படும். கிழமைக்கு $185 வரை வழங்கப்படும். தொடர்ந்து உடல் நிலை பாதிப்பு இருந்தால் இந்தக் கொடுப்பனவு கூ320 வரை கிடைக்கலாம். இந்த நிவாரணத்தை பெறும் நபருக்கு வயது 65 வரும்போது இந்தக் கொடுப்பனவு குறைக்கப்படும்.

பராமரிப்பவர் சலுகைகள்(Caregiver Benefits)

விபத்தில் காயப்பட்டவர்களுக்கு பராமரிப்பவர் ஒருவர் தேவைப்பட்டு, அதற்குரிய ஆளை வைத்துக் கொள்ள ஏற்கனவே ஒரு பண கொடுப்பனவும் இல்லை என்றால் அதற்கான பராமரிப்பவர் சலுகை நிவாரணத்தினை பெற்றுக் கொள்ளலாம்.

இந்தக் கொடுப்பனவு முதல் 104 கிழமைகளுக்கு வழங்கப்படும். அதன் பின்னரும் உடல் நிலையில் பாதிப்பு இருக்குமானால் இது தொடரலாம். கிழமைக்கு $240 வரை வழங்கப்படும். காயமடைந்தவரில் தங்கி வாழ்பவர்கள் எவராவது இருந்தால் மேலதிகமாக இருக்கும் ஒவ்வொருவருக்கும் கிழமைக்கு $50 வழங்கப்படும்.



மருத்துவ, புனர்வாழ்வு, மருத்துவ தாதிகள் சலுகைகள் (Medical, Rehabilitation, Attendant care Benefits)

விபத்தின் காரணமாக ஏற்படுகின்ற மருத்துவ, வைத்தியசாலை, அம்புலன்ஸ், பல் வைத்தியம், உளவியல், காது, நடக்க முடியாதவர்களுக்கான வண்டி என பல வகையான செலவுகளையும் பெற்றுக் கொள்ளமுடியும்.

மருத்துவ தாதி சலுகைகள் மாதம் $3000 வரை வழங்கப்படுகின்றது. முற்றாக இயங்க முடியாத நிலையில் இருந்தால் இச் செலவுக்காக ஒரு மொத்த தொகையாக ஒரு மில்லியன் டொலர் வரை வழங்கப்படும்.

ஏனைய செலவுகளுக்கான கொடுப்பனவுகள்

-விபத்தில் காயமடைந்தவர் கல்வி சம்பந்தமான செலவுகளுக்கு பணம் செலுத்தி இருந்து, விபத்தின் காரணமாக இக் கல்வியினைத் தொடர முடியாது போனால் $15,000 வரை இச் செலவுகளை திரும்பி மீள் பெறலாம்.

-விபத்தில் பாதிக்கப்பட்டு இருப்பவரை பார்க்க வருபவர்களுக்கான செலவுகள் கணிசமான அளவு பெற்றுக் கொள்ளலாம்

-விபத்தில் பாதிக்கப்பட்டவர் தனது வீட்டை துப்பரவாக்கும் வேலைகளை செய்ய முடியாமல் இருந்தால் அதற்குரிய செலவாக கிழமைக்கு $100 வரை பெற்றுக் கொள்ளலாம்.

-விபத்தின் போது தூர்ந்து போன மூக்குக் கண்ணாடி, உடுப்புகள், காது கேட்கும் கருவியின் செலவுகளையும் பெற்றுக் கொள்ளலாம்.

-சிகிச்சைக்குப் போய்வரும் போக்குவரத்து செலவையும் இவர் பெற்றுக் கொள்ளமுடியும்.

மரணச் செலவுகள் (Death & Funera; Expenses)

விபத்தில் காயமடைந்தவர் உடனடியாக மரணமானால் அல்லது குறிப்பிட்ட காலத்தின் பின்பு மரணமானாலும் அவருடைய மனைவிக்கு அல்லது கணவருக்கு $25,000 வழங்குவதுடன், அவரில் தங்கி வாழும் ஒவ்வோர் பிள்ளைக்கும் குறைந்தது $10,000 வழங்கப்படும். திருமணமாகாதவராக இருந்தால் இவ் $25,000 இவரில் தங்கியிருப்போருக்கு பகிர்ந்து வழங்கப்படுவதுடன் மரணவீட்டுச் செலவுக்காக குறைந்தது $6,000 வழங்கப்படும்.

மேலே குறிப்பிட்ட சலுகைகளை தமது காப்புறுதி ஒப்பந்தத்தில் அதிகமான தொகையாக (Optiunal Benefits) வைத்திருப்பவர்கள் மேலதிகமான பல்வேறு வசதிகளையும், அதிகமான தொகைகளையும் பெறமுடியும்.


## கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில்

- வீடு வாங்க விற்க மற்றும் இலவச ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ள
- முதல் முறையாக வீடு வாங்குபவர்களிற்கான சலுகைகளை அறிய
- குறைந்த வட்டி வீதத்தில் Mortgage செய்து கொள்ள

அழையுங்கள் நந்தா





COLDWELL BANKER

Coldwell Banker Coburn Realty

**Nantha Aiyadurai**, B.Eng.

Sales Rep.

Office : 613.823.7555


Cell : 613.866.9931

Toll Free : 1 800 472.6512

## MORTGAGES

*Five Years closing mortgage rates (அடமானம்) 4.9% on $100,000.00 per month installment comes out $550.00. For different time period closing rates are given below*





*LOW - LOW RATES AVAILABLE. TO GET BEST RATE IN TOWN PL. CALL: ANIL JOSHI*

For more information call:

Anil Joshi at

416.888.1072



# MALVERN MONTESSORI SCHOOL

## 10 Sewells Road, Scarborough

*Preparing your children for new experiences, challenges & making them feel connected to a caring community*



### Applications Accepted Now!
### Montessori Pre-School

- Ages 2½ to 6 years
- Morning & Evening classes
- Reading, Writing & math Emphasized
- Low student - Teacher Ratio
- History, Geography & Science
- French Introduction
- Music & Art Classes
- Bright Spacious Classrooms
- Extended care hours (7:30 am - 6:15pm)

**For September 2004/2005**

**Enrollment pl. call:**

**416.724.8900**

# SAFETY TRUCKS

## Training School Ltd.

Training & Trucking Classes A, D & Z




In Classes
- 365 (Learning Permit)
- Log Books
- Air Brake (Z)
- Dangerous Goods
- Border Crossing
- Defensive Driving Course

- தமிழ் மொழி மூலம் அனைத்துப் பயிற்சிகளும் தனித்தனியாகக் கொடுக்கப்படும்.
- One On One Training
- அனுமதிப்பத்திரத்திற்கு (License) உத்தரவாதம் அளிக்கப்படும். வேலை எடுப்பதற்கும் உதவிகளும் ஆலோசனைகளும் வழங்கப்படும்.
- கனடாவில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது தமிழ் TRUCK DRIVING பயிற்சி இடம். (10 ஆம் ஆண்டு)
- We Accept Welfare & Unemployment Insurance
- வாரத்தில் ஏழு நாட்களும் பயிற்சிகள் வழங்கப்படும்.

17 Years Canadian Experience with Trucks

சிறந்த பயிற்சி பெற அழையுங்கள்:

**YOGAN SOCKALINGAM**

Truck Driving போதனாசிரியர்

**905-793-9546 / 416-616-5979**

250 Summerlea Road, Brampton, ON

# SRI PARADISE Catering & Take -out

## 416.269.4509 / 416.509.2454



292 Markham Road, Scarborough, ON

திங்கள் - செவ்வாய்
கொத்துரொட்டி
ஆடு or மாடு or கோழி
**$2.99**

புதன் - வியாழன்
புட்டு Combo- குழல் பிட்டு, மாசிச்சம்பல், நெத்தலி, உருளைக்கிழங்கு குழம்பு
**$2.99**

வெள்ளி ரக்கறிச்சாப்பாடு 5 மரக்கறி, சலாட், பப்படம், ரசம், மிளகாய்ப்பொரியல், அச்சாறு, பாயாசம், வடை
**$4.50**

வெள்ளி
inner Special
மசாலா தோசை, சாம்பாறு, சம்பல்
**$2.99**

Dinner Special
சிங்கப்பூர் நூடில்ஸ், தண்டூரி சிக்கன்
**$3.99**



சமையலில் அனுபவம் உள்ளவர்கள் வேலைக்குத் தேவை. தொடர்பு கொள்ளவும்

பரடைசின் Special
புரியாணி, தண்டூரி சிக்கன், இஞ்சிச் சம்பல், salad
**$2.99**

Daily speciall
மரக்கறிச்சாப்பாடு 3 மரக்கறி சலாட், பப்படம் ரசம், மிளகாய்ப்பொரியல், அச்சாறு
**$2.99**

சனி - ஞாயிறு Lunch Special வாழையிலைச் சாப்பாடு
கோழி, ஆடு, மாடு, இறால், நண்டு or மீன், முட்டை, கருவாடு, அச்சாறு, மீன் பொரியல், கட்டைச்சம்பல், கட்லட், உருளைக்கிழங்கு, நெத்தலி பிரட்டல், கத்தரிக்காய் பிரட்டல்
**$5.99**

# எங்களுக்கான திரைப்பட மொழி

## அடிமை, தொப்புள்கொடி, Be Indian, Hyderabad Blues II

மூன்றாவது சர்வதேச குறுந்திரைப்பட விழாவிற்கென நோர்வேயிலிருந்து அனுப்பப் பட்ட திரைப்படம் "தொப்புள் கொடி" சுமார் 75 நிமிடங்கள் கொண்ட இத்திரைப்படம் நேரம் கருதி (30 நிமிடங்களுக்கு மேல்) திரையிடப் படவில்லை. ஆனாலும் அவர்களது முயற்சி யும், அக்கறையும், திறந்த மனப்பான்மை யுடன் கருத்துக்களை ஏற்றுக்கொள்ளும் மனோபாவமும் இப்படம் பற்றிய சிறுகுறுப்பு ஒன்றை எழுத வைத்துள்ளது.

விழாவிற்கான அடித்தளம் "எங்களுக்கான திரைப்பட மொழியை உருவாக்குவோம்" என்பதே. இதனை அங்கு காட்டப்பட்ட அனைத்து குறுந்திரைப்படங்களுடன், தொப்புள் கொடியும் முதலாவது அடியை எடுத்து வைத்துள்ளது. நேரடியாகக் கூறின் இந்திய சினிமா, குறிப்பாக தமிழ்ச் சினிமாவின் தாக்கத்திலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டுள்ளது.

இரு குடும்பங்கள். ஒன்றின் தகப்பன், தனது மகளை இலங்கையிலிருக்கும் தனது சகோதரியின் மகனுக்கு திருமணம் செய்து வைக்க விரும்புகிறார். மகளுக்கு நோர்வேயில் காதல். அத்துடன் தனது மாமியின் மகனை அவர் பார்த்ததேயில்லை. தகப்பன் முன்னாள் ஆசிரியர். அவர் அடி, தடி என இறங்கி விடுகிறார். இறுதியில் கோயிலில் வைத்து மகளை தன்னுடன் இலங்கை வரும்படியும், அங்கு மகளுக்கு, தனது சகோதரியின் மகனை பிடித்துக் கொடுத்து திருமணமும் முடிக்கலாம் என்கிறார். காதலனும், சகோதரனும் எதிர்ப்பு தெரிவிக்கின்றனர். ஆனால் மகள் தனது காதல் வெற்றி பெறும் என்ற நம்பிக்கையுடன் இலங்கை செல்கிறாள்.

மற்றொரு குடும்பம், நோர்வேத் தமிழ் மகளை திருமணம் செய்து நோர்வே வரும் மணமகன் மனைவியில் தங்கியிருக்க வேண்டி வருகிறது. மொழிப்பிரச்சினை, வேலை இல்லை. மாப்பிள்ளை தடுமாறுகிறார். தான் தனது காலில் நிற்க வேண்டும். லண்டன் செல்கிறார்.


குறுந்திரைப்பட விழாவும் (2004)
சிறந்த படத்திற்கான விருதும்

02. 10. 2004
சனிக்கிழமை மாலை 5.00மணி

சிவன் கோவில் மண்டபம்
4 A Clarendon Rise
Lewisham, London SE13 5ES

இப்போட்டியில் கலந்துகொள்ள விரும்பும் படைப்பாளிகள்
25. 09. 2004 திகதிக்கு முன்பு உங்கள் படைப்புகளை கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பிவையுங்கள்

VIMBAM
4 Burges Road, London E6 2BH
United Kingdom
07956 490 694, 07830 286 580
e-mail: vimbam@hotmail.com


முதலாவதில் "தொப்புள் கொடி" என்ற மந்திரம் "தகப்பன்" என்ற ஆணின் உருவக வழிபாட்டின் வெளிப்பாடாக காட்டப்படுகிறது. பல காட்சிகளில் இவர்களது காட்சி அமைப்பின் அழுத்தம் வெளிப்படுகிறது. இலங்கையிலிருந்து திரும்பும் தகப்பனிடம், தாய் தகப்பனை நினைத்து (கணவனை) அடிக்கடி கதைத்ததை மகள் கூறுகிறாள். ஆனால் தகப்பனோ அதிகார தோரணையில் "குடிக்கிறதுக்கு ஏதாவது கொண்டுவா" என்கிறார். அதேபோல் தாயின் பாத்திரமும், யதார்த்தமாக அமைக்கப்பட்டுள்ளது. இப் படத்தின் குறிப்பிடத்தக்க அம்சம் பாத்திரங்களின் யதார்த்தம்.

### வானரன்

இரண்டாவது குடும்பம் நேரடியாகவே ஆணாதிக்க வெளிப்பாட்டை அழகாக காட்டியுள்ளார்கள். பல இடங்களில் இயக்குன ரின் திறமை வெளிப்படுகிறது. இரு பெண்மணிகளும் சனநெருக்கடி அதிகமான வீதியொன்றில் நடந்து வரும் பொழுது அவர்களது குரல்கள் மாத்திரமே கேட்கிறது. ஒரு தடவை அவர்கள் அதற்குள் காணாமல் போய் விட்டார்களோ என எண்ணத் தோன்றுகிறது. ( உண்மையும் கூட)

படத்தின் மிக முக்கிய குறைபாடு நடிகர்களின் நாடக நடிப்பு. இது தொப்புள் கொடியில் மாத்திமல்ல 3ஆவது விழாவில் காட்டப் பட்ட குறுந்திரைப் படங்களில் பெரும் பாலானவற்றில் பொதுவாகவே காணப்படுகிறது.

இப்படத்தின் கதை, திரைக்கதை, வசனம், இயக்கம் - ஸ்ரீபன். தயாரிப்பு, ஒளிப்பதிவு, படத் தொகுப்பு - துருவன். இசை கே. சுந்தர். இவர்களது திரைப் பட வாழ்வு வளம் பெற வாழத்துக்கள். இவர்களால் மிகத் தரமான திரைப்படங்களை வெளிக்கொணர முடியும் என்பதற்கு இத்திரைப்படம் ஓர் உதாரணம்.

### 3 ஆவது குறுந்திரைப்பட விழா

3ஆவது குறுந்திரைப்பட விழாவில் சுமார் 23 குறுந்திரைப்பட / விவரணப்படங்கள் காட்டப் பட்டன. இதில் கனடாவிலிருந்து சுமார் 16 படங்களும், இந்தியாவிலிருந்து 4, நோர்வே 1, இலங்கை 2 படங்களும் காட்டப்பட்டன. கனடாவிலிருந்து விழாவிற்கு தேர்வுக்கு என கொடுக்கப்பட்ட அனைத்துப் படங்களுமே தேர்வு செய்யப்பட்டன. இரண்டாவது நிகழ்வில் 3இலிருந்து 16 என்பது மிக, மிக அதிகமே. புலம் பெயர் நாடுகளில் கனடாவில் தான் அதிகமான குறுந்திரைப்படங்கள், மற்றும் திரைப்பட முயற்சிகளும் மேற் கொள்ளப்படுகின்றன என்பது குறிப்பிடத் தக்கது. இவ்விழாவில் காட்டப்பட்ட அனைத்து குறுந்திரைப்படங்களும், லண்டன், பாரிஸ், சிட்னி போன்ற நகரங்களில் தொடர்ச்சியாக நடைபெறவுள்ள விழாக்களில் திரையிடப்படவுள்ளன. மிகவும், குறிப்பாக இவ்விழாவின் அனைத்துத் தொழில்நுட்ப விருதுகளையும் கனடிய குறுந்திரைப் படங்களே பெற்றுக்கொண்டன. இது கனடிய குறுந்திரைப்படங்களின் வளர்ச்சியையே காட்டுகிறது.

தட்டிக்கொடுக்க வேண்டும். அதே சமயம் சுட்டிக்காட்ட வேண்டும். அதுவே இது. ஒவ்வொரு இதழிலும் ஒன்று இரண்டு குறுந்திரைப்படங்கள் பற்றிய கருத்துக்களை பதிவு செய்ய விரும்புகின்றேன்.

விழாவிற்கு சுமார் 6 நாட்களுக்கு முன்னர் ஒரு தொலைபேசி அழைப்பு. விழாவிற்கான நியமனத் திகதி முடிந்து விட்டதா? ஒரு குறுந்திரைப்படம் தரலாமா?
"எப்பொழுது தருவீர்கள்"?
"இனிமேல் தான் எடுக்க வேண்டும்"?
"என்ன விடயம்"
விடயம் விளங்கப்படுத்தப்பட்டது.
"எப்பொழுது தருவீர்கள்" மீண்டும் வினவுகின்றேன்.
"வெள்ளிக்கிழமைக்கு முன்பு"
அழுத்தமாக பதில் வருகிறது.
"வெள்ளிக்கிழமை நடுச்சாமம் ஆகியும் எதுவும் வரவில்லை. சுமார் 2 மணியிருக்கும் வீட்டின் முன்பாக கார்நிற்கும் சத்தம் கேட்டு கதவை திறந்த பொழுது ஒரு சிறு குறிப்புடன் ஒரு DVD. அதுவே "அடிமை". முதலில் இவர்களது முயற்சிக்கு பாராட்டுக்கள். மிகக் குறுகிய காலத்தில் எடுக்கப்பட்டது. பல குறைபாடுகளை எதிர்பார்த்தேன். ஆனால் அன்றைய விழாவில் பலராலும் பாராட்டப்பட்ட திரைப்படம். மூன்று இளைஞர்கள், ஒருவர் "சுதன் மகாலிங்கம்" ஏற்கனவே சில திரைப்படங்களில் வில்லனாக நடித்துள்ளார். மற்றவர் வாசன் ஒளிப்பதிவாளர். மற்றவர் புதியவர். இவர்களது கூட்டுமுயற்சியே இது.

Wellesley and Parliament பகுதியில் வாழும் ஒரு போதை மருந்து அடிமை இளைஞன். போதை மருந்து வாங்குவதாக பலரிடம் காசுக்குக் கெஞ்சுகிறான். இறுதியில் ஒரு பெண்மணியின் கைப்பையை பறித்துக் கொண்டு ஓடுகிறான். கைப்பைக்குள் பணத்தை எடுக்க முயலும் பொழுது ஒரு படம் தட்டுப்படுகிறது. அது அம்மாவின் படம். அம்மாவும் தனது கைப்பையை தேடி அங்கு வரும்பொழுது இருவரும் இணைகின்றனர்.

இறுதிக்காட்சியே இக்குறும்படத்தின் மோசமான அம்சமாகும். கைப்பையை பறிப்பதுடன் (தமிழ்ப் பெண்மணி) முடித்திருந்தால் இன்னமும் அழுத்தமாக இருக்கும். ஒரு கேள்வி எழத்தான் செய்கிறது. அதே பகுதியில் வாழும் தாய், தனது மகனை இதற்கு முன் காணவில்லையா? அவர் அதற்கு என்ன செய்தார்?

இக்குறும்படத்தின் முன்பகுதி மிகவும் சிறப்பானது அவர்கள் கூற முற்பட்ட செய்தியை மிகவும் தெளிவாக கூறுகிறது. சமூகம் சார்ந்த அக்கறையுடன் விமர்சிக்கிறது. எமது சமூகத்தில் பலர் போதை மருந்தால் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் பற்றிய சமூக விமர்சன வெளிப்பாடாக இக்குறுந்திரைப்படம் வெளிப்படுகிறது.

இவர்கள் தேர்ந்தெடுத்த நிறம் "மஞ்சள் கலந்த கறுப்பு". திரைப்படம் முழுவதும் இந் நிறத்திலேயே காட்டப்படுகிறது. பாத்திரம் மாத்திரமல்லாது, நிறம், எமது சூழல், சமூகம் எவ்வளவு அழுக்காறுகளை கொண்டுள்ளது என்பதை வெளிப்படுத்துகிறது. கமாரா நகர்ந்து செல்லும் விதம், மிகவும் சிறப்பாக உள்ளது.

போதை மருந்து அடிமையின், அகவெளிப் பாடை மிகவும் இயல்பாக வெளிக்கொணர்ந துள்ளார் சுதன் மகாலிங்கம். இவரது நடிப்பு மிகவும் நன்றாகவுள்ளது. இவருடன் தாயாக நடித்த சுப்புலக்சுமி காசிநாதனும் சிறப்பாக செய்துள்ளார். பாதிக்கப்பட்டவனை சமூகம் எப்படிப் பார்க்கிறது? சமூகத்தை பாதிக்கப்பட வன் எப்படிப் பார்க்கின்றான். இவ்விரு வெளிப்பாடுகளும் இக்குறுந்திரைப்படத்தில் இயல்பாக வெளிப்படுகிறது. புலம் பெயர் திரைப்பட சூழலுக்கு மேலும் பல நல்ல திரைப்படங்களை தருவார்கள் என்ற நம்பிக்கையை விதைத்துள்ளார்கள்.

### Be Indian

NRI, Non Resident Indian Movies என்ற வகையளவில் வெளிப்பட்டுள்ள மற்றொரு படம் 'Be Indian'. அமெரிக்கா வரும் இளைஞர் குழாம் சந்திக்கும் பிரச்சினைகளை நகைச்சுவையுடன் வெளிப்படுத்துகிறது. அமெரிக்காவில் வாழும் இந்தியர்கள் பற்றிய விமர்சனத்தையும் முன்வைக்கிறது. "உள் மனதில் நீ இந்தியன். உனது கலாசாரம் மகத்தானது" என அழுத்தம் இருக்க வேண்டும். அதேசமயம் புதிய சூழலுக்கு என சில மாற்றங்களை நீ மேற்கொள்ளலாம். கிராமத்திலிருந்து, நகரத்துக்கு வருபவனை போல். ABCD, Green Card Fever போன்ற பல படங்களின் வரிசையில் இப்படம் இடம் பெறுகிறது. இதுபோல் ஒரு புலம் பெயர் தமிழ்த் திரைப்படமும் வரவில்லை என்ற குறைபாடு நீண்டகாலமாகவே உள்ளது. (நகைச்சுவையுடன் சமூகத்தை விமர்சித்தல்)

### Hyderabad Blues II (ஆங்கிலம்)

ஒரு சாதாரண குடும்பப்பிரச்சினை மிகவும் நகைச்சுவையுடன் கூறுப்பட்டுள்ளது. அமெரிக் காவில் வாழும் இந்தியர்கள் பற்றிய இந்தியா வில் வாழும் இந்தியர்கள் பற்றிய இந்தியா வில் வாழும் இந்தியர்கள் பார்வை. Sexual Harrasement போன்ற பல விடயங்களை தொட்டுச் செல்கிறது. எதிலும் அழுத்தம் இல்லை. ஆனால் படம் ஒரு முழுமையான வெளிப்பாடாக படைக்கப்பட்டுள்ளது. ஒரு தடவை பார்க்கலாம். இவ்விரு படங்களும் Markham & Texdo Court இல் அமைந்துள்ள N,N Video வில் பெற்றுக் கொள்ளலாம்.




# ஆழ் மனதின் வெளிப்பாடுகள்

## ஆளுமை வளர்ச்சிக்குப் பிரார்த்தனைகள்

எமது பக்தியின் மகிமை தான், எப்போதும் எங்கும் நிறைந்திருக்கும் இறைவனின் சிறப்பும் அன்பும் எமை விசுவாசத்துடன் சத்தியப் பாதையில் வழிநடத்தும் சக்தி. ஒரு போதும் பயந்து பயந்து நாம் இறைவ்ழிபாடு செய்யத் தேவையில்லை. ஆனால், “எனக்கெல்லாம் தெரியும்” என்ற இறுமாப்பு வந்தால் எமக்கு அந்த அருள் கிடைக்காது. உண்மையை அறிய நாம் முயற்சி செய்யும்போது தான், எமக்குத் தேவையான மற்றவை சகலதும் ஏதோவிதமாக எமைத் தேடி வந்தடைகின்றன. "யாவும் உனது சித்தம் "இறைவா", எனும் பூரண சரணாகதியே உண்மையான பக்தி. எம் ஆழ்மனதின் வெளிப்பாடுகளாகிய எமது ஆசைகள் தான் உண்மையான பேரின்பத்தையும் எம்மையும் பிரிக்கும் சுவர்கள் என்பதை மறக்க வேண்டாம்.

எனது வாழ்க்கைத்தரத்தை உயர்த்தவோ தாழ்த்தவோ செய்யும் முக்கிய காரணிகள் எனது சிந்தனை, சொல், செயல் என்பவை தான். எனது வெற்றிக்கோ தோல்விக்கோ நான் தான் முற்றிலும் பொறுப்பு, வேறு யாருமல்ல எனும் உண்மையை நாம் ஒவ்வொருவரும் உணர வேண்டும்.

எமது ஆழ்மனதிலுள்ள கேடுகளைக் கவனமாக சீர்செய்ய ஆரம்பித்தோமானால் எமை நாமே நேசிக்க முடியும். எமை மதித்து, மரியாதை செலுத்தி எமக்குள்ளிருந்து பெருகும் அன்பின் அடிப்படையில், மற்றவர்களுடன் எமது உறவை வளர்த்தோமானால் வாழ்வின் சகல இன்பங்களும் தாமாகவே எமது மடியில் வந்து விழும். இதைத் தான் மீண்டும் மீண்டும் நான் கூற விரும்புகிறேன். உங்களுக்குள்ளிருந்து, உங்கள் மையத்திலிருந்து வெளிவந்து உங்களை நீங்களே நேசித்து மரியாதை செலுத்துங்கள். சிறுபொறியாய் உங்களுக்குள்ளும் இருக்கும் ஆண்டவன் இதைமட்டும் தான் உங்களிடம் கேட்கிறார். எமது ஆழ்மனதிலிருந்து வெளிவரும் சிந்தனைகள் உணர்வுகள் யாவற்றையும் அலசி ஆராய்ந்து, தீயவற்றை மாற்றியமைத்து உங்களை நீங்களே குணப் படுத்துங்கள். இவை காலத்தால் அழியாத கோட்பாடுகள். நான் சொல்வதைக் கவனமாய் அவதானித்து அவற்றை நீங்கள் கடைப்பிடித்தீர்களானால் உங்களைப்பற்றியும் வாழ்க்கையைப் பற்றியும் ஒரு புதிய விழிப்புணர்வு உங்களுக்கு ஏற்படுவது நிச்சயம். ஒவ்வொரு நாளும் தூங்க முதல் உங்கள் பழைய சிந்தனை, ஆதங்கம், நம்பிக்கை, முடிவுகள், உடன்பாடுகள், உணர்வுகள், எடை போடுதல் போன்ற வற்றை அலசி அணுகுங்கள். உங்கள் பார்வையை மறைத்து தப்பபிப்பிராயங் களை அடையாளங்காண முயற்சி செய்யுங்கள்

நான் நானாக இருப்பதற்கு அத்தியாவசிய ஆதாரமான அடிப்படை மூலச்சாராம்சம் அனைத்தும் எனக்குள் அடங்கி இருக்கின்றன என்பதை உணர்ந்து புரிந்து கொண்டால் தான், எனக்கு வாழ்வில் முன்னேற்றம் வரும்.

அன்பு வாசகரே! இப்படி நாம் சிந்திப்பது மிக மிகக்குறைவு இல்லையா? "அந்தத் தலைவரைப் பார்! இந்த நடிகையைப் பார்!" என மற்றவர்களுடன் தம்மை ஒப்பிட்டுத் தமது தாழ்வு மனப்பான்மைக்குத் தீனி போடுவதிலேயே பலர் தம் பொன்னான வாழ்நாட்களை வீணே கழிக்கின்றனர்.

வித்தியாச, வித்தியாசமான திறமைகளுடன் தான் இறைவன் ஒவ்வொருவரையும் சிருஷ்டித்திருக்கின்றார். கையில் தேசிக்காய் இருக்கும் போது, "சீ சீ இந்தப் புளி எனக்குப் பிடிக்காது, இது ஒத்துவராது, எனக்குத் தோடம்பழம் தான் வேண்டும்" என்று குறைப்பட்டுக் கையிலுள்ளதை வீசி விட்டு தாகத்தால் வருந்துபவர்கள் பலரை நாம் நிச்சயம் சந்தித் திருப்போம். சில சமயங்களில் நாம் கூட இப்படி நடந்திருக்க லாம். வேறு ஒருவர் முன்வந்துதான் நான் முன்னேற உதவி செய்து எனக்கு வழி காட்ட வேண்டும் என்ற நம்பிக்கையில் ஒன்றுமே செய்யாது வாழ்க்கையை வெறுமனே ஓட்டிக் கொண்டிருப்பவர்கள் பலர் உலகெங்கும் இருக்கின்றார்கள்.

இந்த நிலையில் சிக்குண்டிருந்தால், நீ நிச்சயம் மாற வேண்டும் எனும் விழிப்புணர்வு உனக்கு உடனடியாக ஏற்பட வேண்டும். ஆமாம்! எனது வாழ்க்கைத்தரத்தை உயர்த்தவோ தாழ்த்தவோ செய்யும் முக்கிய காரணிகள் எனது சிந்தனை, சொல், செயல் என்பவை தான். எனது வெற்றிக்கோ தோல்வி க்கோ நான் தான் முற்றிலும் பொறுப்பு, வேறு யாருமல்ல எனும் உண்மையை நாம் ஒவ்வொருவரும் உணர வேண்டும்.

“நூலைப்போல் சேலை, தாயைப்போல் பிள்ளை!” விதையைப் போன்ற, தாவரங்களைத்தான் இயற்கை தருகின்றது. இறைவனின சாராம்சத்தை உள்ளடக் கிய விதைதான் எம் ஒவ் வொருவரையும் உருவா க்குகின்றது. அரு வமான இறைவன் ஆன்மீக வடிவி னன். நீங்கள் உணராவிடி னும், நீங்கள் ஒவ்வொரு வருங்கூட ஆன்மீக வடி வத்தினர் தான். இறை வன் நல்லவர். நீங்களும் நல்லவர்கள். ஆனால் பிரச்சினை ஒவ்வொன்றின் போதும், நாம் இறைசக்தி யின் மேல் அவநம்பிக்கை யடைந்து, "இது ஏன் இப்படி, அது ஏன் அப்படி" எனத் தடுமாறுகின்றோம். சந்தேகத்திற்கே இடமில்லாமல் இறைவனின் சாரம் எமக்குள் உறைவதை எமது அவநம்பிக்கையினால் நாம் மறுக்கின்றோம். உனக்குள் உறையும் ஆன்மாவின் சாரமும் இறைவனின் சாரமும் ஒன்றே ஒன்றுதான். உன் மையத்திலுள்ள சாரத்திலும், இறைவனின் அதே சக்தி, அதே ஞானம், அதே அன்பு நிறைந்துள்ளது. இந்த இறைவனின் சாரம் தான் உனது உண்மையான ஸ்வரூபம். அத்துடன் கூடியதாக உனக்கு உடலும் உண்டு. சில சமயம் உனது உடலைப் பற்றி உனக்குத் திருப்தியில்லை. உன் கண்களுக்குப் புலப்படும் உடலையே நீ சரிவரக் கண்காணிப்பதில்லை. ஆகவே கண்ணுக்குத் தெரியாத உன் மிகுதிப் பகுதியை எப்படிக் கவனிக்கின்றாய்? இறைவனின் மறுபதிப்பாகிய உனது ஆன்ம சாரத்தை நீ எப்படிப் போஷிக்கின்றாய்? உனது சாரத்தை எவ்வாறு சுத்தப்படுத்தித் தூய்மையாக்குகின்றாய்? இறைவடிவமாகிய உனது ஆன்மசாரம் சுத்திகரிக்கப்படவேண்டும். இறைவனுக்கு ஒன்றுமே தேவையில்லை. உனக்குத்தான் இது அத்தியா வசியம். மற்றைய ஜீவிகளில் உறையும் இறைசக்தியை நீ உணர்ந்து, அவர்களுக்குத் தன்னலமற்ற சேவை செய்வதால் உனது இறைஸ்வரூபத்தை ஆன்மீகத்தால் நீராட்டு.




*மேலதிக தகவல்களிற்கு அழையுங்கள் 905-624-9617*



**லலிதா புரூடி**


# DEBT & MORTGAGE SOLUTIONS !!



- கடன் தொல்லையா?
- கடன்காரர்களின் தொந்தரவா?
- Credit பிரச்சனையால் Mortgage கிடைக்கவில்லையா?

**கவலைப்படாதீர்கள்!**

அனைத்து வித பொருளாதார பிரச்சனைகளுக்கும் தீர்வு காண

முதல், இரண்டாவது, மூன்றாவது Mortgage பெற அழையுங்கள்

**ராஜ்**

**416-835-6695**

**Call : ‘RAJ’**

for all kinds of Debt & Mortgage Solution

Lendingtree.ca



# MANIKKANDAN

Take Out & Catering

தமிழ் தாய் நினைவைக் கொண்டுவரும் தராதரமிக்க, கனடிய கோட்பாடுகளுக்கு அமைய எமது தயாரிப்புகளான சோறு, மரக்கறி, இறைச்சிக்கறி, கடலுணவு, கொத்துரொட்டி வகைகள், ரொட்டி, இடியப்பம், புட்டு, இட்டலி, தோசை, மசாலா தோசை, வடை, Rolls, Cutlets, Patties போன்ற பலவகை உணவுவகைகளைப் பெற்றுக்கொள்ள அழையுங்கள் **மணிகண்டன்**.

**புதிய கிளை**

1585 Ellesmere Rd.

(Progress Park Plaza)

**416.438.2225**



Wedding or any Occasions
Special Deals Available

- சுவை நிறைந்த பல்வேறு வகையான INDIAN SWEETS
- வீட்டில் தயாரிக்கப்பட்ட மாங்காய், தேசிக்காய் அச்சாறு



**இடியப்ப மெஷின் விற்பனைக்கு உண்டு.**

இல்லங்களில் நிகழும் பலவிதமான வைபவங்களுக்கும் தேவையான உணவுகளை ருசித்து மகிழ்ந்திட அழையுங்கள் மணிகண்டன்.

Call: **Siva: 416-283-1260**

790 Military Trail , Unit 1A, Scarborough ON M1E 4P7



உண்மை
உணர்வு
உரிமை
உறுதி
பொங்கு தமிழ்
ரொரன்ரோ
Queens Park
செப்ரெம்பர்
25
416.335.0622
அம்மன் ஜீவலரி
Rajeev Koneswaran
நியூ ஸ்பைஸ் லாண்ட்


# பனைமரக் காடே! பறவைகள் கூடே!

## தொடர வேண்டிய தெய்வீக பந்தம்

•தொடக்கத்திலேயே சொல்லியாக வேண்டும். எழுதுவதற்கு எதுவுமில்லை என்பதால் இதை எழுதவில்லை. தமிழனுக்கும் இந்தப் பனைமரத்துக்கும் உள்ள பந்தம் பண்டு தொட்ட பந்தம் என்பதால், ஒரு தெய்வீக பந்தம் என்று நான் நம்புவதால் எழுதுகிறேன்.

•பனைமரம் உலகின் பல இடங்களில் இருந்தாலும் தமிழன் வாழும் தமிழ்நாட்டிலும், ஈழத்திலும் தான் மிகமிக அதிகம். இன்னும் சொல்லப்போனால் யாழ்ப்பாணத்தமிழனுக்கும் பனைக்கும் உள்ள பந்தம் ஒரு படிமேல். தமிழ் நாட்டின் பரப்பளவை யாழ்ப்பணத்துடன் ஒப்பிடமுடியாது. இருப்பினும் அடத்தியளவில் யாழ்பாணத்தில் தான் பனைகள் அதிகம் என்பது ஒரு புதுமையான உண்மை. "ஏழுபனை ஆழம்", "பனங்காட்டுநரி சலசலப்புக்கு அஞ்சாது" இவை தமிழில் மட்டுமே உள்ள சொற்றொடர்கள்.

ஒல்லாந்தர்கால யாழ்பாணத்தின் இலச்சினையிலும் பனைமரம்தான் நிமிர்ந்து நிற்கிறது




•பனை தமிழர்களின் உயிர்நாடியாய் இருந்தமையை எம் மூதாதையர்கள் கதைகதையாய் சொல்லியிருக்கிறார்கள். தமிழக மன்னர்கள் யாழ்ப்பாணத்தை "ஏழுபனைநாடு" என்று அழைத்தாக வரலாறு சொல்கிறது. 1720இல் யாழ்ப்பாணம் ஒல்லாந்தர் ஆளுகைக்குட்பட்டிருந்தது. அப்போதைய யாழ்ப்பாணத்தின் இலச்சினையை ஒல்லாந்தரின் வரலாற்று நூல் ஒன்றில் பார்த்தேன். அதிலும் பனை மரம் தான் நிமிர்ந்து நின்றது.

## தவா மயில்வாகனம், நெதர்லாந்து

•"பனங்கொட்ட" (பனங்கொட்டை) - இது தமிழர்களைச் சீண்டுவதற்கு சிங்களவர்கள் பாவித்த பாவிக்கும் வார்த்தை. இந்தச் சீண்டல் வார்த்தை என்னையும் வந்தடைந்திருக்கிறது. இதனைக் கேட்ட வேளைகளில் எனக்கு ஒரு போதும் கோபம் வந்ததில்லை. மாறாக இந்தப் பனை தமிழர்களின் சொத்து என்பதை அவர்கள் உறுதிப்படுத்துவதாக எனக்குப்படும்.

•எனது பாட்டனார் பனையுடன் பின்னிப் பிணைந்த தங்கள் வாழ்க்கைபற்றிச் சொன்னவை இப்பொழுதும் நினைத்துப் பார்க்கையில் பசுமையானவையாக இருக்கின்றது.

•நுங்கை அவர் ஒவ்வொன்றாக எடுத்து ஆட்டுக்குப் போடுவதற்காக அரிந்து முடித்து விட்டுத்தான், நுங்கின் கண்களைச் சீவி அந்தச் சுவையான வெள்ளைப் பதார்த்தத்தை எங்களுக்குத்தருவார். அந்தக்கணம் வரை நாக்கு நுனியில் ஈரம் கசியக் காத்திருந்த பொழுதுகள் இனிமையானவை.

•பனையோலைப்பாயில் படுத்துறங்கி, பனைமரத்துலாவில் நீரிறைத்து, பனாட்டும் பழந்தண்ணீரும், ஒடியல்பிட்டும் சுவைத்து, கருப்பநீர் அருந்திக் களித்த எம்மூதாதையர்களின் வாழ்க்கைமுறை வரலாறாகிவிட்டாலும் நினைத்துப் பார்க்கையில் பெருமையாக இருக்கிறது.



•"வெள்ளைக்காரன்" கொண்டு வந்த கோதுமை மான நஞ்சென்று கருதி வீட்டுக்கோடிக்குள் வைத்து பட்டம் ஓட் வதற்கான பசையாக மட்டுமே பயன்படுத்திய மடமை விபரிக்கும் போது சிரிக்கும் எனது பாட்டனாரின் முகம். "இந்த கோதுமை மா இப்போ ஒடியல் மாவை முந்திவிட்டது" என் சொல்லும் போது வாடிப்போகும்.

•பனையைப் பற்றி ஒரு பகிடிக்கதையும் உண்டு. அந் நாட்களில் சிங்களச் சோதனை எழுதும் தமி உத்தியோகத்தர் களுக்கு பனையைப் பற்றி அடிக்கடி கேள் வருவதாக ஒரு நம்பிக்கை. ஒரு தடவை ஒரு பனையைப்பற்றி சிங்களத்தில் பத்து வசனங்கள் மனப்பாட பண்ணி விட்டு சோதனைக்குப் போனராம். அங்கே மாட்ன பற்றி எழுதுமாறு வந்திருந்ததாம். உடனே இவர் பனைன பற்றிய பத்து வசனங் களையும் எழுதிவிட்டு இறுதியி "இப்படியான மரங்களில்

தொடர்ச்சி 18ம் பக்க


# ACTION HONDA

"WHERE CAR OWNERSHIP IS MADE EASY"



புதிய பழைய HONDA வாகனங்களை
ஈழத்தமிழ் மகன்
**சோதீஸ்**
இடம் பெறும்போது

- சிறந்த சேவை
- Life time Oil change
- மற்றைய எல்லா இடங்களையும் விட கிடைக்காத குறைந்த விலைக்கு உத்தரவாதம்.




**இம்மாத Special**

*2.2% Financing*
*Honda Certified Used Vehicles*

**416-704-1179**

**அலுவலக நேரம்**
Mon., Fri., Sat.: 9:00 am - 6:00 pm
Tues., Wed.: 12 noon - 9:00 pm
4334 Kingston Rd, Scarborough




# NTE AUTO

**New Trade Engineering Inc.**




ஸ்காபரோவில் 13வது வருட தன்னிகரற்ற சேவை

உங்கள் சகலவிதமான ஐரோப்பிய, ஜப்பானிய, அமெரிக்க வாகனத் திருத்த வேலைகளுக்கு நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்.

Also Air Condition Service & Repair

SIVABALAN


416.750.1573

**என். ரி. இ. ஓட்டோ இங்க்**

151 NATUCKET BLVD., UNIT #12, SCARBO., ON

IN NEW MILLENNIUM WE ARE ENTERING 11TH YEAR SERVICE IN SCARBOROUGH.

# தமிழர்களாய் ஒன்றிணைவோம்



## பொங்குதமிழ் வெற்றிபெற வாழ்த்துகிறோம்




**Port Union/Kingston**
Detached 2-Storey
3+1 Bedrooms
3 Washrooms




**Steels/Markham**
Detached 2-Storey
3 Bedrooms
3 Washrooms - Brand New House

**For Rent**
**Neilson/McLevin**
**2 Bedroom condo**

HOMELIFE
HIGHER STANDARDS

**HOMELIFE/GTA Realty Inc.**
1711 McCowan Rd., Suite 206, Toronto, ON M1S 3Y3

## சசி செல்வரட்ணம்

Sales Representative

Direct **416.725.1125**
Office **416.321.6969**






# மாணவர் பகுதி

S.F. Xavier (ஆசிரியர்)

## Answers to Tutorial 152 — September 01, 04

**Ans. 1.** A = 41 $cm^2$




**Ans. 2.** A has 23 cans nose than B.


∴ If B collects Y can perweek and A collects x cans per week.

$3y = 23 + 3x \quad 3y - 3x = 23$

$y - x = 23/3 \quad = 7\,^2/_3$ an average number.

**Ans. 3.** 8 x 8 x 10 x 10 x 10 x 10 x 10 = 6400000 ways.

**Ans. 4.** $\binom{14}{1} \binom{13}{1} = 182$




**Ans. 5.** $^8/_{100} = {^2/_{25}}$

## Tutorial - 153

1. If a license plate consists of 3 letters followed by 4 numbers. How many liscence plates can be created.

2. You are given an exam with 16 questions 2 of which you can choose not to answer. How many ways can you pick the questions to answer if you ha[ve] to answer the 1st and the last 4 questions.

3. The odds against Huskies winning the hockey tournament 7 to 1. If you [place] a $10 - 00 wager that they will win, what will you win if they do.

